பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | கார்த்திகை 6 | முஹர்ரம் 12 | இதழ் 282
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 21-11-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA RECEIVED PERIODICALS DIVISION

## "[illegible]படியை சபை நிதியிலிருந்து எடுக்கமாட்டேன்"

### யாழ். முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுவந்த விசேடபடியை இனிமேல் சபை நிதியிலிருந்துதான் எடுக்கவேண்டுமென்றால் அதை நான் எடுக்க மாட்டேன்.

யாழ். மாநகரசபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நேற்றுமாலை நடைபெற்றபோது யாழ் நகரமுதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

இனிமேல் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு சபைதான் விசேடபடி வழங்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருப்பதாக திருமதி அந்தோனியர்சுவாமிநாதர் கூறிய போதே முதல்வர் மேற்கண்டவாறு கூறினார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# பொத்துவில் எம். பி. திருமதி ஆர். பத்மநாதன்!

(கொழும்பு)

பொத்துவில் தொகுதியின் எம். பியாக திருமதி ரங்கநாயகி பத்மநாதனை நியமிப்பதென்று ஐக்கியதேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சியின் இந்த நியமனம் குறித்து தேர்தல் ஆணையாளருக்கும்அறிவிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் இரண்டாவது உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்த திரு. எம். கனகரட்னம் காலமானதைத் தொடர்ந்து காலியாகவிருந்த அவரது இடத்திற்கு அவரது சகோதரியான திருமதி பத்மநாதனை நியமிப்பதென்று நேற்று நடந்த ஐ. தே. க. செயற்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கட்சியின் இந்த முடிவை கட்சிப்பொதுச் செயலாளர் திரு. அபயவர்த்தன நேற்றே தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்தார்.

திருமதி பத்மநாதன் காலஞ்சென்ற திரு. எம். கனகரட்னத்தின் அரசாங்கச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

திரு. ரி. ஆர். வெலிகம்மனவின் மறைவினால்ஏற்பட்டுள்ள மாவனல்ல தொகுதிக்கான உறுப்பினராக சட்டத்தரணி திரு. சந்திரதாச ரணதுங்காவை நியமிப்பதென்றும் செயற்குழு முடிவுசெய்துள்ளது

# வேலை இழந்தோர் விவகாரம்:

# விரைவில் இறுதி முடிவு

## கூட்டணிக்குழுவிடம் ஜே. ஆர். உறுதி

(கொழும்பு)

வேலைநிறுத்தத்தினால் வேலை இழந்தவர்களின் எதிர்காலம் குறித்து அமைச்சர்களுடன் மகாநாடு ஒன்றை நடத்தி விரைவில் இறுதி முடிவெடுக்கப்படும் என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா தமிழர்விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் குழுவிடம் உறுதியளித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், திருமலை எம். பி திரு. இரா சம்பந்தன் ஆகியோர் நேற்றுக்காலை ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இச்சந்திப்பின்போதே மேற்கண்டவாறு உறுதியளிக்கப்பட்டது.

கடந்த இனக்கலவரத்தின் போது குடிபெயர்ந்து வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசு நிலங்களில் குடியேறியுள்ள மலையகத் தமிழ் மக்களின் நிலை குறித்தும் இவர்கள் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினார்கள்.

இவ்விரு பிரச்னை குறித்தும் விரைவில் கூட்டப்படும் அமைச்சர்களை உள்ளடக்கிய மகாநாட்டில் முடிவு செய்யப்படும் என்றும் ஜனாதிபதி இக்குழுவினரிடம் உறுதி அளித்தார். (ம-இ)

### அனுதாபத் தீர்மானம்

(கொழும்பு)

முன்னாள் செனட்டர் திரு. பொன் நாகலிங்கத்தின் மறைவு குறித்து நேற்று பாராளுமன்றத்தில் அனுதாபத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. (ம-இ)

### பிரார்த்தனை இன்று

(யாழ்ப்பாணம்)

இந்து ஆலயங்களில் சமத்துவ வழிபாட்டை ஏற்படுத்தவும், சீதனக்கொடுமையை ஒழிக்கவும், தமிழினத்தின் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துமுகமாகவும் அறவழிப் போராட்டக்குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை முழுநாள் பிரார்த்தனையை மேற்கொள்ளுகிறார்கள்.

காலை 6 மணி முதல் மாலை 2 மணி வரை தந்தை செல்வா நினைவாலய முன்றலில் இப்பிரார்த்தனை நடைபெறும். (கொ-இ)

### யாழ். மாநகரசபையில்

## சிறிமா பற்றிய பிரேரணை 3-வது தடவையாக வாபஸ்

(யாழ்ப்பாணம்)

திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் குடிஉரிமையைப் பறிக்கும் நடவடிக்கையை எதிர்க்கும் பிரேரணை யாழ். மாநகரசபையில்நேற்று மூன்றாவது தடவையாக வாபஸ் பெறப்பட்டது.

யாழ் மாநகரசபை மாதாந்தப் பொதுக்கூட்டம் முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரான திரு. அலோசியஸ் இப்பிரேரணையைக் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்திருந்தார்.

ஏற்கனவே இருதடவைகள் இப்பிரேரணை சபையில் கொண்டுவரப்பட்டு கைவிடப்பட்டது. முதலில் கூட்டணியைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் இப்பிரேரணையைக் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்திருந்தார், நேரம் போதாமையினால் பின்போடப்பட்டது. அடுத்த கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இப்பிரேரணை இடம்

(8ம் பக்கம் பார்க்க)

# அரசியல்லாபம் தேடி நாம் சிறிமாவை யாழ். அழைக்கவில்லை

## யாழ். மாவட்ட அமைச்சரின் கூற்றுக்கு சபையில் நல்லூர் 'சிவா' பதில்

(கொழும்பு)

தமிழர் கூட்டணியினர் அரசியல் லாபம் தேடுவதற்காகவே முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை யாழ்ப்பாணம் அழைத்து கூட்டம்கூட்டுகிறார்கள் என்று யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் சபையில் பேசுகையில் கூறினார். எமது நோக்கம் அதுவல்ல. எந்தக்கட்சி ஆட்சியிலிருந்தாலும் சரி ஜனநாயக விரோத செயல்களைப் புரியும் அரசுகளுக்கு எதிராகக் குரல்கொடுக்க தமிழர் விடுதலைக் கூட்டணி என்றுமேதயங்காது.

அதே வேளையில் தமிழ்மக்கள் எமக்கிட்ட ஆணையே எமக்கு முக்கியமாகும். யார் என்ன சொன்னாலும் எமக்கு இடப்பட்ட மக்கள் ஆணையை நிறைவேற்றுவதில் நாம்இறுதி வரை உறுதியாக நிற்போம்.

இவ்வாறு நல்லூர் எம்.பி. திரு. எம் சிவசிதம்பரம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கடந்த ஆட்சிக் காலத்தில் நீங்கள் எதிர்க்கட்சியிலிருந்த போது அரசின் [illegible] விரோத செயல்களுக்கு [illegible]ராக உங்களுடன் சேர்ந்து நாமும் குரல் கொடுத்தோம்.

நுவரேலியாவில் நீங்கள் சத்தியாக்கிரகம் இருந்தபோதும் கூட்டணியின் சார்பில் திரு. வி. தர்மலிங்கம் அதில் கலந்து கொண்டார்.

அத்தனகலையில் நீங்கள் அன்று சத்தியாக்கிரகம்இருக்க முற்பட்டபோது ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்கள் குறித்து அன்றைய ஜனாதிபதியுடன் பேச்சுநடத்திய குழுவிலும் எமது சார்பில் திரு. தர்மலிங்கம் கலந்துகொண்டார்.

[illegible]

ஆதாரமான சில புகைப்படங்களையும் சபையில் காட்டினார் நுவரெலியா சத்தியாக்கிரகத்திலும் ஜனாதிபதி மாளிகை பேச்சுவார்த்தையின் போதும்

(8-ம் பக்கம் பார்க்க)

## சிறிமா இன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

இன்று வெள்ளி மாலை விமான மூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடையும் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கு சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோர் விமான நிலையத்தில் வைத்து வரவேற்பளிக்கவுள்ளனர்.

திருமதி ஸ்ரீமாவோ விமான நிலையத்திலிருந்து சுன்னாகம் சந்தை மைதானத்தை வந்தடைந்து அங்கு நடைபெறும் விவசாயிகள் கூட்டத்தில் உரையாற்றுவார்.

சனிக்கிழமை முற்பகல் தெல்லிப்பளையில் நடைபெறும் கட்சி அங்கத்தவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவார். அன்று பிற்பகல் யாழ். மாநகர முன்றலிலுள்ள அமரர் அல்பிரட் துரையப்பாவின் சிலைக்கு மாலை அணிவிப்பதுடன் துரையப்பா சமாதிக்கும் சென்றுஅஞ்சலி செலுத்துவார். அன்றிரவு யாழ். திறந்தவெளி அரங்கில் நடைபெறும் ஐந்து கட்சிக் கூட்டுப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுவார்.

ஞாயிற்றுக் கிழமை காலை யாழ்ப்பாணத்திலிருந்து கார் மூலம் கிளிநொச்சிக்குச் செல்லும் திருமதி ஸ்ரீமாவோவுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

அனுபவமுள்ள பைண்டர் தேவை. ஒப்புவெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். ஸ்ரீ ஆத்ம ஜோதி அச்சகம், நாவலப்பிட்டி. 7395

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அண்ணாபாம், இணுவில். 7403

டாக்டரின் பாவிப்பில் உள்ள புத்தம் புதிய CD 185 Honda Road Master மோட்டர் சைக்கிள் விற்பனைக்குண்டு. விலை ரூபா 17,500/- தொடர்புகொள்க: தேவா, அம்பாள் வாசம், டச் ரோட், உடுவில் மேற்கு, சுன்னாகம். 7400

ஜப்பானில் முற்றாக மறுசீரமைக்கப்பட்டு உன்னதநிலையில் இறக்குமதிசெய்யப்பட்ட 'இசூசு' டீசல் ட்றக் (Isuzu. Elf-TLD 64/1976/77-Model 250 Double Rear Wheel Diesel Truck), மிற்சுபிசி Mitsubishi 4 DR 50 A Diesel Engine 4 Cylinder), டொயோட்டா (Toyota 2 J 4 Cylinder Diesel Engine) - டொயோட்டா (Hiace) வானை டீசல் வாகனமாக மாற்றுவதற்கு ஏற்றது-ஆகியவை உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சாந்தி ரயர் வேக்ஸ், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 80 5. (7392)

## கல்வி

உள், வெளிநாடுகளில் மின்சாரவேலை—தமிழ் 7-ம் வகுப்பு படித்திருந்தால் ஆறுவாரங்களில் எலெக்றிஷன் (Electrician) டிப்புளோமா—Jaffna Technical School, 53, (30) டேவிற் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 7350

## காணவில்லை

ஊர்காவற்றுறை இலட்சுமி பவான் ஒட்டலில் 4 வருஷங்கள் ஆக ரீ மேக்கராய் இருந்த தி. இலக்கின குமார் (ராசன்) என்பவர் கடந்த இரண்டு கிழமைகளாகக் காணமல் போய்விட்டார். இவருக்கு வயது 15, பொதுநிறம். கடைசியாக கறுப்புச் சேட்டும், வெள்ளைச் சாரமும் உடுத்திருந்தார். இவரைக் காணமல் இவருடைய தாயார் கடும் சுகவீனமுற்று இருக்கிறார். இவரை அறிந்தவர்கள் லெட்சுமி பவான் ஊர்காவற்றுறை அல்லது வே. திருநாவுக்கரசு, சரவணை கிழக்கு, வேலணை என்னும் விலாசத்துக்கு அறிவித்து ரூபா 100/- சன்மானப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். 7405

## ஏல விற்பனை

லக்ஷ்மிபவுன் புறோகர்ஸ் கடையில் 1-1-74 முதல் 31-12-78 வரை அடைவு வைத்து மீளாத நகைகள் யாவும் 1980 டிசம்பர் 5-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2 முதல் கொழும்பு, பொரளை, பொரளை பிலட் 1197-ம் நம்பர் கடையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

என்.எம்.ஏ.சி. அப்துல் ஹமீது அன் சன்
ஏலதாரர்
7403



கல்விச் திணைக்களதினால் அகில இலங்கை ரீதியில் 'தமிழ்ப்பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற இசைப்போட்டியின் மத்திய பிரிவில், வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி செல்வி ரஞ்சினி பாலசிங்கம் முதலிடத்தைப் பெற்றுள்ளார், இம் மாணவி அண்மையில் இலங்கை இளம் கலைஞர் மன்றம் நடத்திய இசைப்போட்டியிலும் முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டார் -செல்வி ரஞ்சினி பாலசிங்கம் வட இலங்கைச் சங்கீத சபையால் நடாத்தப்படும் வாய்ப்பாட்டுப் பரீட்சையில் நாலாம்தரத்தில் சித்தியடைந்துள்ளார் என்பதுகுறிப்பிடத்தக்கது,

## ஞான விருந்து

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் ஞானவிருந்து நிகழ்ச்சி மானிப்பாய் வேலக்கைப்பிள்ளையார் கோவிலில் நாளை மாலை நடைபெறும்,

இந்நிகழ்ச்சியில் அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் 'மேன்மைகொள் திருமுறைகள்' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

(பிரிவு 532)

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமில்லாது மரணமெய்திய தொல்புரம் சின்னத்தம்பி பரமலிங்கம் என்பவரின் மரணச்சொத்து விடயமாக

மரணமெய்தியவர்

மரணச்சொத்து
நியாயாதிக்கம்
இல. ரீ/62

எதிர்

பரமலிங்கம் கைம்பெண் வள்ளியம்மை, தொல்புரம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27-ந் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
மூ. நல்லலிங்கம்,
பதிவாளர்.

1980-ம் ஆண்டு புரட்டாதி மாதம் ஆம் [illegible] இன்று திகதியிடப்பட்டது.

7379

## இன்று பாராட்டு விழா

(உடுப்பிட்டி)

அகில இலங்கையில் நடாத்தப்பட்ட பல கவிதைப் போட்டிகளில் முதல் இடங்களைப் பெற்றுக்கொண்ட பண்டிதர் திரு. கே. ரீ. ஞானப்பிரகாசம் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

இப்பாராட்டு விழாவை கரவெட்டிக் கத்தோலிக்க இளைஞர் மன்றம் இன்று வெள்ளிக்கிழமை கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் நடாத்தவுள்ளது.

## பரிசு எழுத்தாளருக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"ஆனந்தவிகடன் பொன் விழா இலக்கியப் போட்டியில் 'தூரத்து ஒவியங்கள்' நாவலுக்கு முதற்பரிசு பெற்ற திரு. க. அருள்சுப்பிரமணியத்தைப் பாராட்டும் விழா இம்மாதம் 28-ம் திகதி வெள்ளி மாலை திருகோணமலை இந்துக் லூரியில் திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் கல்வியதிகாரி திரு. வெ. சபாநாயகம், திரு பொ. சிவசேகரம், பண்டிதர் எஸ். வைரமுத்து, பண்டிதர் இ. வடிவேலு, திரு. இரா. நாகலிங்கம், திரு. கே. பி. புலேந்திரராஜா, ஜனாப் ஏ. வல். எம். இஸ்மாயில் ஆகியோர் உரையாற்றுவர்.

திரு க. அருள் சுப்பிரமணியம் பதிலுரையாற்றுவார்.

த. சண்முகராசா,
சட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்,
கோண்டாவில்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐதுறூஸ் மாகாம் வீதி, முகம்மது சுல்தான் முகம்மது மீரான் முகிதீனுடைய மரணசாதனம் சம்பந்தமான விடயத்தில்

— மரணமெய்தியவர்

மீரான் முகிதீன் கைம்பெண் ஜமீலா, ஐதுறூஸ் மாகாம் வீதி முஸ்லிம் வட்டாரம் யாழ்ப்பாணம்.

— மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கானது மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரால், மேற்சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தினை எண்பிப்பதற்காகவும், குறித்த மரணசாதனத்தின் மூலம் ஈகைபெறுவரென்ற முறையில் குறித்த மரணசாதனத்தின் பிரதி இணைக்கப்பட்ட மேற்சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்கள் மீதான நிர்வாகத் தத்துவப் பத்திரங்கள் பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும், 1980ம் ஆண்டு மார்கழி மாதம் 12-ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

தயாரித்தது
த. சண்முகராசா
மனுதாரின் பதிவுபெற்ற தரணி. 7398

# இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 6-ந் திகதி
வெள்ளிக்கிழமை
(21-11-80)

மேடம்: ஆசைவார்த்தைகளின் மூலம் உங்களிடம் அகப்பட்டதைச் சுருட்டிக் கொள்ள முனைவர், இனம் தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள்.

இடபம்; வாழ்க்கையில் ஏற்படும் திடீர் திருப்பம் திரவிய லாபத்தைக் கொண்டு வரும், மேடைப் பேச்சாளர்களுக்கு இன்று பொன்னான நாள், இன்று மாணவர்களுக்கு கல்வியால் முன்னேற்றம் உண்டு.

மிதுனம்: அமைதிக்குப் பங்கம் ஏற்படும் சம்பவங்கள் இடம் பெறலாம், நெருங்கிய ஒருவரின் உடல்நலன் பாதிக்கபபடலாம், எதிலும் நிதானம் வேண்டும்.

கடகப்: அச்சுப்பட்டணியில் ஈடுபடுவீர்கள், பிறருடைய ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், தாய்வழிமூலம் நற்செய்தியும் வந்து சேரும்.

சிங்கம்: நீண்ட நாள்களின் பின்பு இன்று நிறைவான தினம். எதிர்பார்த்த பொருள் கைவந்து சேரும், பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் மாரனின் கணை தாக்கும்.

கன்னி: பகைமூட்டம் வட்டமிடும், வீணான வார்த்தைகளால் மனம் புண்படும், தொழில்துறையில் முட்டுக்கட்டை தோன்றக்கூடும், மனத்திடம் வேண்டும்.

துலாம்: கருத்தொருமித்த காதலர் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறும், தாம்பத்திய வாழ்க்கையில் பிணைப்புகள் இறுகும்.

விருச்சிகம்: சிந்தையில் குழப்பநிலை தோன்றும், மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத் தரலாம், செலவினங்கள் அளவிற்கு மிஞ்சியதாக இருக்கும், தெய்வநம்பிக்கை நன்று.

தனுசு: பாக்கிய விருத்தியுடன் பரம்பொருளின் அருளும் கிடைக்கும், தக்கசமயத்தில் உதவுவதற்கு தந்தை முன்வருவார், சிறப்பான தினம்.

மகரம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள், பிறரின் கவனம் உங்கள்மீது செலுத்தப்படும், சொந்தமாகத் தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும், சிலருக்குப் பதவியுயர்வும் கிடைக்கும்.

கும்பம்: புதுமையான செய்தியொன்று கிடைக்கலாம் சிலர் அரசியலில் குதிப்பதற்கும் ஆலோசிக்கக் கூடும், பொதுமக்களின் ஆதரவுடன் பொருள் விருத்திக்கும் சிறப்பான தினம்.

மீனம்: எதிலும் தடுமாற்ற நிலை தோன்றும், குசுகுசுப் பேச்சுக்களின்மூலம் அவதூறுகள் பரப்பப் படலாம், உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை ச. வேலுப்பிள்ளை

## பங்கீட்டுக்கு 25,000 மரக் கன்றுகள் தயார்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வளச் சபையினர் யாழ். மாவட்டத்தில் மர நடுகை இயக்கத்தை ஊக்குவிக்குமுகமாக 25 ஆயிரம் மர முந்திரிகைக்கன்றுகளையும் இப்பில் இப்பில் கன்றுகளையும் உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் வழங்கியுள்ளனர்.

இம்மாதமும் அடுத்த மாதமும் மேற்படி மரங்களை மக்களுக்கு வழங்குவதற்காகமேலும் 25 ஆயிரம் மரக்கன்றுகளை நீர்வளச்சபையினர் தமது காரியாலயத்தில் ஆயத்தமாக வைத்திருப்பதாக வடபிராந்திய நீர்வளச்சபையின் பிரதம பொறியியலாளர் திரு. ரி.குணசேகரம் தெரிவித்தார். (சொ.அ)

## வலி—வடக்கிற்கு ரூ.79,000 ஒதுக்கீடு

(மாவிட்டபுரம்)

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தேசியசேவை இளைஞர்மன்றஅனுசரணையுடன் மரம் நாட்டும் இயக்கத்தை மேற்கொள்ள 79 ஆயிரம் ரூபா பணம் ஒதுக்கப்பட்டு மரம் நாட்டும் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 15 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் வீதியோரங்கள் பொது இடங்கள், வீடுகள் போன்றவற்றில் மரங்களை நாட்ட ஏற்பாடு செய்யப்பட்டு இதற்காக 79 ஆயிரம் ரூபா பணத்தை தேசியசேவை இளைஞர் மன்றம் ஒதுக்கியுள்ளது.

15 கிராம சேவகர் பிரிவுகளிலும் சுமார் 11 ஆயிரம் மரக்கன்றுகளை நாட்ட திட்டமிடப்பட்டு வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (அ)

## கதம்ப நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கதம்பவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை மேற்படி கல்லூரியின் அழகரட்ணம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. க. முத்துவேற்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் விசேடவிருந்தினராகக் கலந்து கொள்வார். பிரதம விருந்தினர்களாக கல்வி அதிகாரி திரு. கே நவரத்தினம், மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்சயன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (பசா)

## பரிசளிப்பு விழா

(கொழும்பு)

கொழும்பு டி. எஸ். சேனநாயக்கா வித்தியாலயத்தின் பரிசளிப்புவிழா இம்மாதம் 27ம் திகதி வியாழன் மாலை கல்லூரிவிளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கலந்து கொள்வார்.

## ஆஸ்பத்திரிக்கு வைத்தியக் கருவிகள்

(மன்னார்)

மன்னார் ஆஸ்பத்திரிக்கு பல வைத்தியக் கருவிகள் வந்து சேரவுள்ளன. அத்துடன் இன்னும் டாக்டர்கள் சிலரும் இவ்வாஸ்பத்திரிக்கு நியமிக்கப்படவிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. (ச)

## நவீர் சாதனை

(மன்னார்)

உலக சாதனை நிலைநாட்டிய ஜனாப் பரீத் நஸீர் எருக்கலம்பிட்டியில் பல நிகழ்ச்சிகளை நடத்தி மக்களை அதிசயத்தில் ஆழ்த்தினார்.

எருக்கலம்பிட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலேயே இவரது அதிசயநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இவர் பல கொடிய விஷப்பாம்புகளுடன் ருவிஸ்ட் நடனம், கபேரு, பைலா, டிஸ்கோ, ஆகியநடனங்களை ஆடிக்காட்டினார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈரான் - ஈராக் யுத்தம்:

# ''ஈரான் இறுதி வெற்றி கிடைக்கும்வரை போரிடும்''

## ஈரானிய ஜனாதிபதி அறிவிப்பு

லண்டன், நவ. 20

''ஈரான்—ஈராக் யுத்தத்தில் ஈரானிற்கு இறுதிவெற்றி கிடைக்கும்வரை அது தொடர்ந்து போராடும்''

மேற்கண்டவாறு ஈரானிய ஜனாதிபதி ஜனப் பானிசத்தர் இவ்யுத்தம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் கூறினர்.

அதேவேளை ஈரானின் எண்ணை உற்பத்திநகரமான குசென்டெஸ், எண்ணெய் சுத்திகரிப்பு நகரான அபடான் ஆகியவற்றில் ஈரான்—ஈராக் துருப்புக்களுக்கிடையே தொடர்ந்து கடும் யுத்தம் நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் யுத்தத்தின்போது பெரும் ஆட்சேதம் ஏற்பட்டுள்ளதாக இரு நாடுகளும் கூறுகின்றன.

'குசென்டெஸ்' நகரில் ஏற்பட்ட யுத்தத்தில் 850 ஈராக்கியத்துருப்புக்களையும் அபடானில் ஏற்பட்ட யுத்தத்தில் 80 ஈராக்கியத் துருப்புக்களையும் கொன்றதாக ஈரான் கூறுகின்றது.

அதேவேளை குசென்டெஸ் யுத்தத்தினபோது 69 ஈரானியத் துருப்புக்களையும், அபடானில் 150 ஈரானியத்துருப்புக்களையும் கொன்றதாக ஈராக் தெரிவிக்கின்றது. (வெ)

விமான விபத்து:

## 200 பேர் உயிர் தப்பினர்

சியோல், நவ. 20

தென்கொரியாவில் கொரியா ஏயர்லைன்சின் விமானமொன்று தீப்பிடித்துக்கொண்டபோது அதில் பயணம் செய்த சுமார் 200 பேர் உயிர் தப்பியதாகக் கூறப்படுகிறது.

இதில் பயணம்செய்த 12 பேர் இறந்துவிட்டதாகவும் காயமடைந்த பலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 206 பயணிகளும், 17 விமானச் சிப்பந்திகளும் இவ் விமானத்தில் பயணம்செய்ததாகக் கூறப்படுகிறது.

இவ் விபத்தினல் விமானம் முழுவதும் எரிந்துவிட்டதாக விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (வெ)

உடுத்துறைக் கொள்ளை:

## மூவர் கைது; நகையின் ஒரு பகுதி மீட்கப்பட்டது

(புலோலி)

நள்ளிரவில் வீடொன்றினுள் புகுந்து அங்கிருந்த வயோதிபத்தம்பதிகளைப் பயமுறுத்தி தாலிக்கொடி காப்புகள் உட்பட 16000 ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்தது சம்பந்தமாக சந்தேகத்தின் மீது மூன்று பேரைக் கைது செய்த பொலிசார் கொள்ளையடிக்கப்பட்ட தங்கநகைகளில் ஒரு பகுதியையும் மீட்டுள்ளனர்.

உடுத்துறையில் உள்ள வீடொன்றினுள் நள்ளிரவில் புகுந்த கொள்ளையர் கோஷ்டியொன்று அங்கிருந்த வயோதிபத்தம்பதிகளைப் பயமுறுத்தி தாலிக்கொடி காப்புகள் உட்பட 16000 ரூபா பெறுமதியான தங்கநகைகள் கொள்ளையடிக்கப்பட்டதாகப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிஸ் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனப் பி.எம்.டீன் சார்ஜன்ட் ஜனப் எம்.ரி.எம். உவைஸ் கான்ஸ்டபிள்களான விஜயத்தினம், மரியநாயகம் ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டி உடுத்துறையைச் சேர்ந்த ஜெயராசா அல்லது ஜெயம் சந்திரலிங்கம் அல்லது ஐயன் கட்டைக்காட்டைச் சேர்ந்த ஸெபியஸ் வேதநாயகம் ஆகியோரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்ததுடன் கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகளில் ஒரு பகுதியையும் மீட்டது.

இச்சந்தேகநபர்கள் மூவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதவான் இச்சந்தேகநபர்கள் மூவரையும் இம்மாதம் 25-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## பீகாரின் 2வது உத்தியோகமொழி உருது

புதுடில்லி, நவ. 20

பீகாரின் இரண்டாது உத்தியோகமொழியாக உருது மொழியை பீகார் மாநில அரசு பிரகடனப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீனவர்களை நடுக்கடலில் தாக்கி மீன்கள் கொள்ளை!

(மன்னர்)

நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களைத் தாக்கிவிட்டு அவர்கள் பிடித்திருந்த மீன்களையும் சிலர் கொள்ளையடித்துச் சென்றுள்ளனராம்.

இயந்திரப் படகில் மீன் பிடிக்கச் சென்றிருந்த பேசாலை மீனவர்கள் இச்சம்பவம் பற்றி தலைமன்னர் பொலிசில் புகார் செய்துள்ளனர். தலைமன்னர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஏர்ட்லி பொன்னுண்டோ இது சம்பந்தமாக தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டு சந்தேகத்தின் பேரில் நீர்கொழும்பைச் சேர்ந்த மீனவர்கள் சிலரைக் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து படகு, இயந்திரம் என்பனவற்றையும் கைப்பற்றியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (ஈ)

## காணி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

சொழும்புத்துறை, அரியாலை கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் காணிபெறுவதற்கான விண்ணப்பங்கள் அனைத்தும் டிசம்பர் மாதம் 10-ம் திகதிக்கு முன், யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கே அனுப்பப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## புதிய ஜே. பி.



கொழும்பு, ஹல்ஸ்டோப் பிரபல சோதிட நிபுணரான திரு. குமரேசர் சோமசுந்தரம் கொழும்பு மாவட்ட சமாதான நீதிபதியாக கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. சில்வா முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுதேச வைத்தியர் நாகமுத்து குமரேசரின் நான்காவது புத்திரனும், சித்தன்கேணி இந்துக்கல்லூரியினதும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினதும் பழைய மாணவருமாவார்.

அரசாங்க சுருக்கெழுத்தாளராக பல்வேறு நீதிமன்றங்களில் 18 வருடங்கள் இலங்கையில் சேவையாற்றிய பின் வெளிநாட்டு சேவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஈராக் தூதுவராலயத்தில் ஏழு வருடங்கள் பணியாற்றியுள்ளார். சோதிடத்தில் பாண்டித்தியம் பெற்ற இவர் மும்மொழிகளிலும் சோதிடம் சொல்லும் திறமையுள்ளவர். இவர் சிறந்த சமூகசேவையாளராகவும், சமயத்தொண்டராகவும் சகல இன. மதத்தினர்க்கும் பாகுபாடின்றிச் சேவையாற்றி வருகின்றார்.

## ''கூட்டுறவில் பெண்களும் ஈடுபடவேண்டும்''

(புலோலி)

''நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குக் கூட்டுறவுத் துறை மிக முக்கியம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது'' என்று பருத்தித்துறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மாதர் சங்கத்தினரின் தேநீர்ச்சாலையைத் திறந்து வைத்து உரையாற்றிய சங்கத் தலைவர் திரு. கே. துரைராசா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''கூட்டுறவில் ஆண்கள் மட்டும் பங்குபற்றிவிட்டால் போதுமென்று கருதாது பெண்கள் கூட்டுறவில் ஈடுபட்டு நாட்டின் அபிவிருத்திக்காக உழைக்க வேண்டும். இக் கூட்டுறவு மகளிர் குழு பாலர் பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் எமது பகுதிச் சிறுவர்கள் மிகுந்த நன்மையடைவார்கள்'' என்றார்.

சங்க இயக்குநர் சபை அங்கத்தவர்களான திரு. விசாகரத்தினம், திரு.முத்துக்குமாரு, திரு. காராளசிங்கம் ஆகியோரும் கணக்காளர் திரு. சோமசுந்தரஐயர், களஞ்சியப் பொறுப்பாளர் திரு. தேவதாஸ், கல்வி வளர்ச்சி உத்தியோகத்தர் திரு. செல்வராசா, கூட்டுறவு மகளிர் குழுத் தலைவி செல்வி பாய்க்கியசுந்தரேஸ்வரி ஆகியோரும் உரையாற்றினர். (அ)

இந்துசமுத்திர அமைதிப் பிராந்தியம்

## மகாநாட்டை உடனடியாக கூட்டவும்

## ஐ. நா. விடம் இந்தியா கோரிக்கை

நியூயோர்க், நவ 20

இந்து சமுத்திரத்தை அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவது தொடர்பாக ஐ. நா. சபை நடத்தவிருக்கும் மகாநாட்டை தடுக்க மேற்கத்தைய நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகளை இந்தியா கண்டித்துள்ளது.

இம் மகாநாட்டை விரைவில் நடத்தவேண்டுமென்று இந்தியா ஐ. நா. சபையை வற்புறுத்தியுள்ளது. இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் அரசியல் பந்தோபஸ்து நிலைமை மோசமடைந்து வருவதால் இம் மகாநாடு உடனடியாகக் கூட்டப்படவேண்டுமென்று இந்தியாவின் ஐ நா சபை பிரதிநிதி வலியுறுத்தியுள்ளார்

இந்த மகாநாட்டை நடத்துவதில் எந்தவித பயனுமில்லையென்று அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ் ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன. (வெ)

## கலைவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாச்சார உத்துவதிராவிட நுண்கலைகள்வளர்சியை முன்னிட்டு அகில இலங்கை சைவ மங்கையர் சபை நடாத்தும் கலைவிழா இன்று மாலை கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு.கே. சிவநாதன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக கோப்பாய் எம். பி. கதிரவேலுப்பிள்ளை கலந்து கொள்வார். மானிப்பாய் மகளிர் கல்லூரியினரின் பக்த மார்க்கண்டேயர் என்றும் நாட்டிய நாடகமும் இவ் விழாவில் இடம் பெறும். (வெ)

அமெரிக்க பணயக்கைதிகள் விவகாரம்:

## ''ஈரானின் நான்கு நிபந்தனைகளை அமெரிக்கா கொள்கையளவில் ஏற்றுள்ளது''

### ஈரானிய சபாநாயகர் கூறுகிறர்

தெஹ்ரான், நவ. 20

அமெரிக்க பணயக்கைதிகளை விடுதலைசெய்வது தொடர்பாக ஈரான் விதித்த நான்கு நிபந்தனைகளை அமெரிக்கா கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளதாக ஈரானிய சபாநாயகர் ஜனப் சஞ்ஞானி தெரிவித்தார்.

ஈரானின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடாமை, அமெரிக்காவில் உள்ள ஈரானிய சொத்துக்களைத் திருப்பிக்கொடுத்தல் ஆகிய நிபந்தனைகளை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுவிட்டதாக அவர் கூறினர்.

மற்ற இரு நிபந்தனைகளையும் ஏற்பதில் பிரச்னையிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். அமெரிக்க பணயக்கைதிகள் விவகாரம் தொடர்பாக அமெரிக்கா, ஈரான் நாடுகளுக்கிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் அல்ஜீரியா மத்தியஸ்தம் வகித்து வருவது தெரிந்ததே. (வெ)

## மின்சார சபையிடம் ஒப்படைக்கப்படும்

(நெல்லியடி)

அச்சுவேலிக் கிராமசபைஎல்லைக்குள் நடைபெறவேண்டிய மின் இணைப்புவேலைகளை இலங்கை மின்சார சபையிடம் ஒப்படைக்க மேற்படி கிராமசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்பிரகாரம் இடைக்காடு - கதிரிப் பாய்வீதி, பத்தைமேனி பிள்ளையார் வீதி, தம்பாலை- கலப்பிணைவீதி, குலவிக்குளம் பிள்ளையார்கோவில்வீதி இடைக்காடு - சாமித்திடல் வீதி ஆகிய பகுதிகளில் சுமார் 1லட்சத்து இருபத்திஜயாயிரம் ரூபா செலவில் மின்விஸ்தரிப்பு வேலைகள் நடைபெறும். (க)

## சைவ ஆலயங்கள் புனரமைப்பு

(திருமலை)

திருகோணமலை நகரில் பல சைவ ஆலயங்கள் தற்பொழுது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. ஏற்கனவே கிருஷ்ணன் கோவில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுவிட்டது. இப்பொழுது பாடல்பெற்ற கோணேஸ்வரர் ஆலயமும், அருள்மிகு திரு முத்துக்குமார சுவாமி ஆலயமும் புனருத்தாரணம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன கூடிய விரைவில் அவை கும்பாபிஷேகம் செய்யப்படவுள்ளன. அநேகமாக அடுத்த வருட முற்பகுதியில் இவ்விரு ஆலயங்களும் கும்பாபிஷேகம் செய்யப்படலாமென அறியப்படுகிறது. (க)

## தந்தையின் கண்டனத்தைப் பொறுக்க முடியாதாம்

(மாவிட்டபுரம்)

தந்தையின் சொல்லை அசட்டை செய்த தனயனை தந்தை கண்டித்ததையடுத்து மனமுடைந்த தனயன் தற்கொலை செய்துகொண்டார்.

ஏழாலையைச் சேர்ந்த கந்தசாமி உதயகுமார் (17 வயது) என்பவரே தற்கொலை செய்தவராவார், இவரது மரணம் தொடர்பாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்தினர்.

தெல்லிப்பழையிலுள்ள கல்லூரியொன்றில கல்வி பயின்ற இம்மாணவன் வீட்டில் மிகவும் செல்லமாக வளர்ந்து வந்ததாகவும் சம்பவ தினம் நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்கி நீர் இறைக்குமாறு தந்தை சொல்ல அதை அவர் அசட்டை செய்ததால் தந்தை கண்டித்ததாகவும், அதனல் மனமுடைந்த இளைஞர் நஞ்சருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## 'வெண்பாமணி'

(மன்னர்)

மடுவீதி சிங்கள மகாவித்தியாலயத்தில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியராகக் கடமையாற்றும் கவியரசு முருகசூரியனுக்கு 'வெண்பாமணி' என்று பட்டமளிக்கப்பட்டுள்ளது. (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

எப்பொருளை அறிந்தால் ஏனைய பொருள்கள் யாவையும் அறிந்ததாகுமோ அப்பொருளை உணர்த்தும் நூலே வேதாந்தம்.
—சுவாமி சிவானந்தர்

# நமது நோக்கு

## கடன்பட்டார் நெஞ்சம்

'கடன்பட்டார் நெஞ்சம்போல கலங்கினன் இலங்கை வேந்தன்' என்று ஒரு பழைய தனிப்பாடல் முடிகின்றது. இது எப்போது யாரால் பாடப்பட்டது என்று தெரியாவிட்டாலும் எங்கள் நாட்டின் இன்றைய நிலைமைக்குப் பொருத்தமான அடிகொண்ட பாடல் என்பது வெளிப்படை.

கடன்பட்டவர் படும்பாடு இன்றைய தட்டுப்பாட்டு நிலைமையில் பலர் அறிந்த விடயம். ஆயினும் அதனை விளக்கப் புலமை எவ்வாறு செயற்பட்டிருக்கிறதென்பது அபூர்வமான கண்டுபிடிப்பு. இலங்கைவேந்தன் கலங்கின கலக்கம் கடன்பட்டார்நெஞ்சம் போன்றிருந்தது புலவரின் கூற்று.

இன்று இலங்கை வேந்தனும் கடன்பட்ட நெஞ்சமும் இரண்டறக் கலந்து சங்கமித்திருப்பதை நாம் காணமுடிகிறது புலமையின் நிலைகடந்து நேரடி உண்மையாக எங்கள் முன்னிலையில் காட்சியளிக்கிறது.

பட்ஜட் விவாதத்தில் கடந்த ஆட்சியில் பதில் பிரதமராகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பதில் தலைவருமான திரு. மைத்திரிபால சேனநாயக்கா இதனை விட்டுப்பெரும் கலக்கம்தெரிவித்தார். அது நியாயமானதென்று நாம்கொள்ளவேண்டும்.

கடன்படுவது இலங்கை அரசுக்குப் புதியதோர் சாதனையல்ல. எமது ஆட்சிக் காலத்தில் கடன் வாங்கி நாட்டை நாசப்படுத்தியதாகக் குறைகூறப்பட்டது. இன்று நிலைமை என்ன? நாம்பெற்ற கடனைவிடப் பன்மடங்கு கடனை இன்றைய அரசு பெற்றுள்ளது'

இவ்வாறு கண்டனம் தெரிவித்த திரு. மைத்திரிபாலவின் நெஞ்சு கலங்கியிருக்குமென யூகிக்க இடமுண்டு. ஏன்? இந்த அரசு பட்ட கடனை, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தால் அதுவே திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கும்.

இவ்வாறு நாம் கூறும்போது ஆறுவருடங்களுக்கொருமுறை ஆட்சி மாறுமென்ற நம்பிக்கை கொண்டதாகக் கருதிவிடலாகாது. அவ்விதஸ்திரமற்ற அரசியல் நிலை உண்டானால் வெளிநாட்டு உதவி ஒருபோதும் கிடையாது.

இன்று ஆசியப் பிராந்தியத்தில் ஆகக்கூடிய அளவு வெளிநாட்டு உதவியைப் பெறும் நாடு இலங்கையாகும். சனத்தொகை அடிப்படையில் இலங்கை ரூபா 825 படி பெறுகிறது. இதற்குக் கூறப்படும் காரணம் இலங்கை அரசாங்கத்தின் கொள்கையில் கொண்டுள்ள நம்பிக்கையே.

இந்த நம்பிக்கை, நாணயம் கெட்டுவிட்டால் தொடர்ந்து வெளிநாட்டு உதவி ஏது?

இன்று இருந்து நாளைக்கு மாறும் ஆட்சியாளர்கள் கூசாமற் கடன் வாங்கி, அதைத் திருப்பிக்கொடுக்கும் பொறுப்பை வருகிற அரசுக்குச் சுமத்திவிடுவார்கள். இன்றைய அரசின் போக்கு அவ்வாறு அமைகிறதென அஞ்சிக் கலங்குகிறார் திரு மைத்திரிபாலா.

இன்றைய இலங்கை வேந்தன் இதை எவ்வாறு நோக்குகின்றார்? அரசின் அமைச்சர்கள் கலங்கினதாகவோ அஞ்சுவதாகவோ தெரியவில்லை. ஆயினும் அரசன், நாட்டின் ஜனாதிபதி கவலை கொண்டிருக்கிறார்.

கடன்பட்ட பெருந்தொகை நிதி வீணாக விரயப்படுகிறது அறிந்து, ஜனாதிபதி கடும் நடவடிக்கைகள் எடுக்கவிருப்பதாகச் செய்தி கூறுகிறது. சிறப்பாகக் கூட்டுத்தாபனத்துறை ஒவ்வொன்றிலும் எவ்வாறு பணம் செலவழிக்கப்படுகின்றது, அவசியமற்ற செலவுகள் என்று நுணுக்கமாக ஆராய்ந்து சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகள் மீது தண்டனை விதிக்கப்படவிருக்கிறது.

பட்ஜட் விவாதத்தில் அமைச்சர்கள் நாட்டுக்கு எங்கெங்கிருந்து பண உதவிகள் கிடைக்கின்றன என்ற பட்டோலை வாசித்தார்கள். உரியமுறையில் நிதி உபயோகிக்கப்படுகிறதா என்பது பற்றி போதிய அளவில் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

உண்மை நிலை அறிந்த ஜனாதிபதி அவசர நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதாக எண்ண இடமுண்டு. கடந்த மாதம் உள்நாட்டு அமைச்சின் செயலாளர் சிறில் கபகே கச்சேரிகளில் கையாளப்படும் கணக்கு வைப்புமுறைபற்றி பெருங்குறை தெரிவித்தார். இவ்வித ஒழுங்கீனங்கள் பற்றியும் அவற்றால் ஏற்படக்கூடிய மோசடிகள் பற்றியும் ஜனாதிபதி தம்முடைய அமைச்சரவை மூலம் தக்க தீர்வுகாண வேண்டியது அவசியம்.

பிறநாடுகள் தரும் உதவியில் ஒவ்வொரு சதமும் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படல் வேண்டும். இவ்வாறு செய்யத் தவறினால் நாட்டுக்கு மீட்சி ஏது. நாம் முதலில் குறிப்பிட்ட கூற்றை மெய்யாக்கி விடுவதே மிச்சம்.

இன்று சேர் சி. வி.இராமன் நினைவுதினம்

# பௌதிகத்துறையில் உலகில் முதல் நோபல்பரிசு பெற்றவர்

உலகுவியக்கத்தக்க ஆன்மீக ஞானிகளையும் அரசியல் தியாகிகளையும் ஒப்பற்ற கலைஞர்களையும் ஈன்றெடுத்த பெருமை பாரத மாதாவுக்கு உண்டு. இத்தகையபெருமை வாய்ந்த மாதா விஞ்ஞான மேதைகளுக்கும் தாயாகவிளங்குகிறாள்.

**-செ. குகேந்திரன்**

1930ல் பௌதிகத்துறையில் நோபல் பரிசைப் பெற்ற சர். சி. வி. இராமன் அவர்கள் பொதுவாகப் பாரதநாட்டுக்கும் பெரும்புகழை ஈட்டியவர் ஆவர்.

கணிதத்துறையிலும் பௌதிகத்துறையிலும் விரிவுரையாளராக விளங்கிய வேங்கடராமன் சந்திரசேகர ஐயருக்கு மகனாகப் பிறந்த இவர் விஞ்ஞான மேதைக்கு வேண்டிய தகுதிகள் பலவும் வாய்க்கப்பெற்றவராக விளங்கினார்.

தகப்பனார் திருச்சிராப்பள்ளியில் திருமதி ஏ. வி. என். கல்லூரியில் இவருக்கு நான்கு வயதாகும் போது கணிதத்துறையிலும் பௌதிகத்துறையிலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார். விசாகப்பட்டினத்தில பத்து வயதுவரை படித்தபின் 1903ம் ஆண்டில் ஜனாதிபதிக் கல்லூரியில் பீ. ஏ. வகுப்பைமதராஸில் பூர்த்தி செய்து தமது பதினாறம் வயதில் எம் ஏ. படிப்பை ஆரம்பித்தார். பத்தொன்பது வயதில் (1907) சிறந்த சித்தியுடன் முடித்த பின்னர் 1906ல் தத்துவச் சஞ்சிகை Philosopical Magazine இல் மூன்று பெயர் பெற்ற தத்துவச் சிந்தனைகளை வெளியிட்டார்.

பல்கலைக்கழக விஞ்ஞானக் கல்லூரி உபவேந்தர் சர். அசுதோஸ் முகர்ஜியை இராமனின் ஆற்றல் கவர்ந்ததால் அவருக்குப் பௌதிகத்துறையில் மேலிடத்தை நல்கினர். 1917 தொடங்கி பதினைந்து வருடங்கள் இவர் இந்திய விஞ்ஞான முன்னேற்றக் கழகத்தில் கௌரவ காரியதரிசியாக இருந்து அதை ஊக்குவித்தார். 1924ல் லண்டன் அரசசேவைப்

5-ம் பக்கம் பார்க்க)

# பொதுப்பரீட்சை கணிதம்:8

யாழ். மாவட்டத்திலுள்ள மிகப்பெரும்பாலான பாடசாலைகளில் இப்பொழுது ஆண்டிறுதிப் பரீட்சைகள் நடந்து கொண்டிருக்கின்றன பரீட்சைக்கான வினாப்பத்திரங்கள் யாவும் யாழ். மாவட்டக் கல்வித்திணைக்களத்தின் பரீட்சைச் சபையினரால் தயாரித்து விநியோகிக்கப்படுகின்றன.

வினாத்தாள்களைத் தயாரிப்பதில் சிறிய பாடசாலைகள் படும் அல்லல்களை நீக்கவும், எல்லாப் பாடசாலைகளிலும் ஒரேவித கல்வித்தரத்தைப் பேணவும் இப் பரீட்சைகள் வெகுவாக உதவுகின்றன. இவ்வாறான சேவைகளை வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கமும், வட மாகாண ஆசிரியர் சங்கமும் தனித்தனி பல்லாண்டுகளாக நடத்தி வந்ததும் சில ஆண்டுகளுக்கு முன்னால் கல்வித்திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்படாததால் அப்பரீட்சைகள் நடைபெற முடியாத நிலை ஏற்பட்டதும் யாவரும் அறிந்த விடயம்.

**எஸ். ஆர். நாயகம்**

ஆசிரிய சங்கங்கள் பரீட்சைகளை நடத்தியபோது பரீட்சை வினாத்தாள்களிலோ பரீட்சை முறையிலோ எவ்வித குறைபாடுகளும் கூறப்படவில்லை. இதற்குக் காரணம் அவ்வச் சங்கப் பரீட்சைச் சபையின் அமைப்பும் கட்டுக்கோப்பான நிர்வாகமுமே யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொரு கல்வி வட்டாரத்திலிருந்தும் குறைந்தது ஓர் ஆசிரியரையாவது உறுப்பினராகக் கொண்ட பரீட்சைச் சபை ஒன்று சங்கத்தால் தெரிவு செய்யப்படும். இச்சபையின் தலைவராக கல்லூரி அதிபர் ஒருவரே பெரும்பாலும்தெரிவு செய்யப்படுவார். சபையின் உபகுழு ஒன்று பரீட்சையின் வினாத்தாள்கள் பரீட்சகர் பற்றிய அந்தரங்கத்துக்குப் பொறுப்பாக இயங்கும்.

ஒவ்வொரு பாடத்துக்கும் இவ்விரண்டு சிரேஷ்ட ஆசிரியர்கள் பரீட்சகர்களாக நியமிக்கப்படுவர். இவர்கள் தயாரிக்கும் வினாத்தாள்களை ஆற்றித் தரப்படுத்த வேறொரு சிரேஷ்ட ஆசிரியர் நியமிக்கப்படுவார். வினாத்தாளுடன் புள்ளியிடும் திட்டமும் சமர்ப்பிக்கப்படும். வினாத்தாள் பாடத்திட்டத்துக்கு அமைவாயும் பாடத்திட்டம் முழுவதையும் தழுவியதாயும் எல்லாத் தர மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிப்பதாயும் அமைந்திருக்கும். இதனால் வினாத்தாள்களினால் குறைபாடுகளோ குளறுபடிகளோ தப்பித்தவறி நுழைவதற்கும் இடமில்லை.

இந்தப் பின்னணியில் யாழ் கல்வித் திணைக்களப் பரீட்சைச் சபையினரால் நடாத்தப்படும் பரீட்சை வினாத்தாள்கள் பற்றிக் காலத்துக்குக்காலம் பல்வேறு விதமான குறைபாடுகள் கூறப்பட்டதையும் கூறப்படுவதையும் நாம் கேட்க நேரிட்டு விட்டது. முன்னர் அடிபட்ட ''லீக்'' கதை இப்பொழுது இல்லை என்பதையும் கூறிவைக்க வேண்டும்.

''ஈழநாடு'' 18-11-80 செவ்வாய்க்கிழமை இதழில் வெளிவந்த மக்கள் கருத்துக் கடிதத்தினை நாம் மிக்க அக்கறையோடு நோக்கவேண்டும். இப்பொழுது நடைபெறும் பரீட்சைகள் மாணவரின் அறிவைப் பரீட்சிக்க மட்டுமல்ல; அடுத்து வரப்போகும் அரசாங்கப் பரீட்சையில் எவ்வாறான வினாத்தாள் தரப்படும் என்பதை மாணவர்க்கு அறிமுகஞ் செய்யவும் பயிற்சியளிக்கவும் இப் பரீட்சைகள் பயன்படவேண்டும். வினாத்தாளின் மாதிரி,

# மக்கள் கருத்து

முன்மாதிரி வினாத்தாளின் மாதிரியிலும் வேறுபட்டுள்ளது என மக்கள் கருத்துக் கூறுகிறது. இது உண்மையானால் மாணவர் வழிகாட்டப்படுவதற்குப் பதிலாகத் திசை திருப்பப்படுவார்கள் என்பதும் உண்மையானது,

இந்நிலையில் இவ்வினாத்தாள் ஏதோ ஒரு ''தமிழ் மொழிப் பயிற்சி'' நூலிலிருந்து அப்படியே எடுத்துப்போடப்பட்ட ஒரு வினாத்தாளாகும் என்று சிலர் 'குசுகுசு'ப்பதையும் கேட்க முடிகிறது.

நிற்க,

கணிதம் பற்றிய சில செய்திகள் 6, 7, 9, 10-ம் தரங்களில் புதிய பாடத்திட்டங்கள் இப்பொழுது நடைமுறையில் உள்ளன. 8-ம் வகுப்பில் புதிய பாடத்திட்டம் ஒன்று 1981-ல் நடைமுறைக்கு வரும்.

இவ்வாண்டில் 1972-ம் ஆண்டு 6-ம் தரத்தில் தொடங்கி ஆண்டுப் படி முறையில் அடுத்த வகுப்புகளில் நடைமுறைக் கொண்டுவரப்பட்டதும் ''புதிய கணிதம்'' என அழைக்கப்பட்டதுமான பழைய பாடத்திட்டமே 8-ம் தரத்துக்கான பாடத்திட்டமாகும்.

புதிய பாடத்திட்டம் பின்வரும் முறையில் நடைமுறைப் படுத்தப்படும் எனக் கல்வித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது:

1979-ல் 6-ம், 9-ம் தரங்களில்
1980-ல் 7-ம், 10-ம் ,,
1981-ல் 8-ம் தரத்தில்.

குறித்த காலம் வரை பாடத்திட்டமே கற்பிக்கப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டது. இதன்பிரகாரம் இவ்வாண்டில் 8-ம் தரத்தில் உள்ள மாணவர்கள் எல்லோரும் 6-ம் 7-ம், 8-ம் வகுப்புகளில் பழைய பாடத்திட்டத்தையே மேற்கொண்டு பயின்றவர்கள், புதிய பாடத்திட்டத்தை இவ்

(7-ம் பக்கம் பார்க்க)

இன்று திருக்கார்த்திகை

# எக்காலம்?

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகும் பேறடைந்து
சஞ்ச மலர்ப்பாதங் கைதொழுவ தெக்காலம்?
தேவர் முனிவரெலாம் தேடியறி யாதவனை
நாவிற் புகழுவதும் நாடுவதே யெக்காலம்?

முருகா முருகாவென் றுருகுநிலை வந்துணர்வு
பெருகும் படியருளைப் பேசுவதே எக்காலம்?
முன்னமே யான்புரிந்த மோசக் கிரியைகளால்
தின்னும் இடும்பைகள் தாம் தீருவதே எக்காலம்?

சூர்பா மடியத் தொடுவே லுடையானே
பேராணவங் கெட்டுப் பேறடைவ தெக்காலம்?
வன்மாயை கன்மமெல்லாம் வற்றித்
தொலையவு நின்
பொன்மாய வேல் கொண்டு போர்புரிவ
தெக்காலகம்?

வள்ளிதெய்வ யானையுடன் வடிவேலுங்
கொண்டழகாம்
புள்ளி மயில் மீதென்முன் பொலிந்து நிற்ப
தெக்காலம்?
தந்தைக் குபதேசம் தந்தகுரு நாதனேயென்
சிந்தைக் குபதேசம் செப்புவதே யெக்காலம்?

வேதப் பொருள்சொன்ன வித்தகனே நின்ஞான
போதந் தெளிந்து பொருளறிவ தெக்காலம்?
சோதிப் பிழம்பாம் நின் தோற்றத்தை
யென்னறிவிற்
சாதித்து மோனஞ் சாதிப்ப தெக்காலம்?

--அருட்கவி நாக. இரமசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சிறிலங்காசுதந்திரக்கட்சியிடம்

# தமிழ் மக்கள் உரிமை தொடர்பாக திட்டவட்டமான கொள்கை இல்லை”

## யாழ். நகரில் ரத்தினவீரா உரை

(யாழ்ப்பாணம்)

ஐக்கியதேசியக் கட்சியினருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினருக்குமிடையில் எந்தவித வேறுபாடுமில்லை. பொருளாதார ரீதியில் இரு கட்சியினரும் ஒரேகொள்கையை உடையவர்கள். சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் ஆட்சிக்கு வந்தாலும் விலைவாசி உயர்வைக் குறைக்கமாட்டார்கள். விலைவாசி உயர்வைக் குறைப்பதற்கான திட்டம் எதுவும் இவர்களிடம் இல்லை.

இவ்வாறு நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற இராமசாமிஐயர் நினைவுதினக் கூட்டத்தில் பேசிய கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் குழு உறுப்பினரான திரு. எச். ஜி. எஸ் ரத்தினவீரா பேசுகையில் கூறினார்.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகர் திரு. பொன் குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. ரத்தினவீரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இன்றைய பொருளாதார அமைப்பை, விலைவாசி உயர்வைக் குறைக்க ஐக்கியதேசியக்கட்சி, சுதந்திரக்கட்சி போன்ற முதலாளித்துவ கட்சிகளிடம் எந்தவித திட்டமும் இல்லை. இவைகளைக் குறைக்க வேண்டுமானால் புதிய கண்ணோட்டத்துடன் இயங்கவேண்டும்.

### பொருளாதார ஸ்திரமின்மை

முதலாளித்துவ நாடுகளில் பலவழிகளில் நெருக்கடிகள் தோன்றியுள்ளன. அதனால் அங்கு பொருளாதார ஸ்திரமின்மை தோன்றியுள்ளது அதுதான் இங்கும் பிரதிபலிக்கிறது. அதைத் தீர்ப்பதற்குத் திட்டமிட்ட பொருளாதார அமைப்பு அவசியம். அதற்குச் சிங்கள தமிழ்மக்கள் ஐக்கியப்பட்டுப் போராடவேண்டும்.

### அமிருக்கு பாராட்டு

புதிய வரவுசெலவுத்திட்டத்தின் உள்நோக்கத்தைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் கண்டுபிடிக்கவில்லை அப்படியிருந்தும்கூட அவர் வரவு செலவுத் திட்டம் பற்றி மிகத்திறமையாக வாதாடியுள்ளார். முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார அமைப்புக்குஏற்றமுறையில் முதலாளித்துவ, ஏகாதிபத்தியவாதிகளின் விருப்பத்திற்கேற்பத்தான் இங்கு வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது அதனால்தான் இங்கு விலைவாசியுயர்வு ஏறி பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

தமிழ்மக்களின் உரிமை சம்பந்தமாக சிறீலங்கா சுதந்திரக்கட்சியிடம் திட்டவட்டமான கொள்கை எதுவுமில்லை. அவர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழ்மக்களின் பிரச்சினையைத் தீர்த்துவைக்காதவர்கள் தானு இனிமேல் தீர்த்துவைக்கப் போகிறார்கள்.

### வகுப்புவாதிகள் முன்னணியில்

தென்னிலங்கையைப் பொறுத்தவரை கே. எம் பி. ராஜரட்ணு, ஜெயசூரியா போன்ற வகுப்புவாதிகள்தான் முன்னணிக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். சுதந்திரக்கட்சியினரும் அவர்களைப் பின்பற்றி இன்றும் வகுப்புவாதரீதியில்தான் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள்தானு தமிழ்மக்களின் உரிமையை வழங்க முன்வருவார்கள்.

### செல்வாக்குள்ள இடங்களில்

சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்குச் செல்வாக்குள்ள இடங்களில் எந்தக் கட்சிக் கூட்டும் இல்லை செல்வாக்கில்லாத இடங்களில்தான் அவர்கள் கட்சிகளின் கூட்டையும், ஒத்துழைப்பையும் விரும்புகிறார்கள். இவர்களை எப்படி நம்பிக் கூட்டுச்சேரமுடியும் இதைத் தமிழ்க்கட்சிகள் நன்கு சிந்திக்க வேண்டும்.

### 10 லட்சம் தோட்டத் தொழிலாளர்

இந்த நாட்டில் வாழ்கின்ற 10 லட்சம் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டிருக்கிறது அவர்களின் குடியுரிமைக்காகப் போராடமுன்வராத ஐந்துகட்சிக்கூட்டு திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமைக்காக மட்டும் போராடுவது ஏன்? சிறிமாவின் குடியுரிமை மட்டும் பறிக்கப்பட்டது ஜனநாயகவிரோதச்செயல் எனச் சிந்திக்கும் இச் சக்திகள் ஏன் இந்திய தோட்டத்தொழிலாளர்களின குடியுரிமை பறிக்கப்பட்டது ஜனநாயக விரோதமானது மட்டுமின்றிச் சர்வாதிகாரமானது எனச் சிந்திச்கத்தவறிவிட்டனர்.

### வேலையிழந்த ஒரு லட்சம் பேருக்காக

வேலைநிறுத்தத்தால் வேலை இழந்த ஒரு லட்சம் தொழிலாளர்களுக்காகப் போராட்டம் நடத்துவோம் என்று கூறிய ஐந்து கட்சிக் கூட்டணியினர் கடைசியில் அத்தொழிலாளர்களை நட்டாற்றில் கைவிட்டுவிட்டு இன்று சிறிமாவின் குடியுரிமைக்காகப் போராடுவது விந்தையிலும் விந்தை என்றார்.

### போராட்டத்தைக் குழப்பினார்கள்

திரு. எஸ. விஜயானந்தன் பேசுகையில் கூறியதாவது:-

தேசிய எதிர்ப்புத்தினத்தன்று நாம் கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தில் நடாத்திய சத்தியாக்கிரக உண்ணாவிரதப் போராட்டத்தைக் கூடக் காணச்சகிக்கமாட்டாத தார்மீக அரசு பொலிசாரின் உதவியுடன் எமது போராட்டத்தை அரைவாசியில் குளப்பியது. ‘தமக்கொரு நீதி பிறருக்கொரு நீதி’ எனச் செயல்படும் இன்றைய அரசுக்குத் தகுந்த பாடத்தைப் புகட்டவேண்டியது மக்களின் தலையாய கடமையாகும். எமது போராட்டத்தைக் குளப்பிய அரசுக்கெதிராக நாம் வேறு ஒரு போராட்டத்தை நடாத்தவேண்டிய நிலையில் இருக்கிறோம். அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். (கொ)

## பௌதிக...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

பதவிக்கு தெரிந்தெடுக்கப்பட்டார்.

மிருதங்கம், வீணை, தபேலா, வயலின், ஆகிய வாத்தியங்களின் கோட்பாட்டுரைகளுடன் மீடகப்படும் விஞ்ஞானத் தந்திகள் அணுவியலினூடு ஒளியின் விரிவுபடும் தாக்கம், ஒளியின் பட்டுதெறிப்புக் கதிர்களின் ஆற்றலும், விசைத்தாக்கங்களும், எச்ஸ்கதிரியல், காந்தமும், காந்தத்தனூடேபாயும் ஒளிப்பிம்பங்களும் போன்ற ஆராய்ச்சி முடிபுகளைத் தொடர்ந்து இவற்றின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வெளிவந்தன.

இராமனின் ஆய்வுக் கண்ணோட்டம் என்ற பொருளில் அவர் எழுதிய கட்டுரைகள் சர், உறுதர்போட் பிரபுவினால் விஞ்ஞான அடிப்படையில் கண்டு பிடிக்கப்பட்ட அதிசக்தி வாய்ந்தவையாக அங்கீகரிக்கப்பட்டன. அவருக்கு ரோயல் கழக விஞ்ஞான சபையில் 1929ல் பிரசுரமாகி 1930ல் இவை பௌதிகத் துறையில் நோபல் பரிசை ஈட்டிக்கொடுத்தன.

உலகில் ஆசியாவில் விஞ்ஞானத்துறையில் முதன்முறையாக இப்பரிசு சேர். சி. வி. இராமனுக்கே கிடைத்தது. நாற்பத்திரண்டு வயதில் இப்பரிசுடன் ஹியூஸ் பதக்கமும் லண்டனில் ரோயல் சொசைட்டியால் இவருக்கு வழங்கப்பட்டது.

மைசூர் மகாராஜாவினால் 1935-ல் ‘இராஜசபாவிபூஷண’ என்னும் பட்டமும், 1954-ல் இந்திய ஜனாதிபதியால் ‘பாரத ரத்ன’ பட்டமும் வழங்கப்பட்டன 1951-ல்பிராங்லின்பதக்கமும் (யூ. எஸ். ஏ.) 1957-ல் ருஷ்யாவின் லெனின் விருதும் இவருக்குக் கிடைத்தன.

இந்திய விஞ்ஞானக் கழகத்தின் ஆய்வுத் தொடர்களில் பதினாறு வருடங்கள் கலங்கரை விளக்கமாக விளங்கியபோது X-கதிர் அலை வரிசைகள். நுண்ணாய்வுபெற்ற கிறிஸ்டல் பௌதிகம், பார்வையினூடல் மூலகங்கள். ஒலி வெள்ளங் கடந்த சப்த அலை எனும் ஆராய்ச்சிகளை நடாத்தி ‘இராமன்-நாத்’ கொள்கைகளை வெளியிட்ட போது பேச்-மான் என்பவரால் மிகப்பெரிய விஞ்ஞானவெற்றியாக அவை கருதப்பட்டன. இவை தொழில் நுட்பங்களிலும், இத்திரனியலிலும் பரவலான உபயோகத்துக்குரியன

1934ல் இந்திய விஞ்ஞானக் கழகத்தை ஸ்தாபித்து அதன் தலைமைத் தாரகத்திகழ்ந்தார் 1935ல் மைசூர் அரசாங்கம் பதினொரு ஏக்கர் காணியை விஞ்ஞான ஆய்வுகூடங்கள். வாசிகசாலைகத்திற்கு அளித்துதவியது. இது 1948-ம் பூர்த்திசெய்யப்பட்டு இராமன் நிறுவனமானது.

(ஆதாரம்: பவோன்ஸ் ஜேர்னல்)

## 24-ம் திகதி

# பாகிஸ்தான் விளையாட்டுக் கோஷ்டிகள் யாழ். வருகின்றன

(யாழ்ப்பாணம்)

பாகிஸ்தான் பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்த கரபந்தாட்டக் கோஷ்டியினரும், ஹொக்கிக் கோஷ்டியினரும் இம் மாதம் 24 ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றிய பல விளையாட்டு வீரர்கள் இக் கோஷ்டியில் இடம்பெறுகின்றனர்.

யாழ்ப்பாணம் வரும் இக் கோஷ்டியினர் 24ம் திகதிகாலை இலங்கை கடற்படையினருடன் கரபந்தாட்டப்போட்டியில் ஈடுபட வுள்ளனர். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். ஹொக்கி விளையாட்டுச்சங்கமும் ஸ்ரீலங்கா பாதுகாப்புச்சேவையும் கலந்து கொள்ளும் ஹொக்கி விளையாட்டுப்போட்டி இம்மாதம் 23ம் திகதி பிற்பகல் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அடுத்து பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி மாணவர்களும், தரைப்படையினரும் கலந்துகொள்ளு போட்டி நடைபெற பாகிஸ்தான் கோஷ்டி கலந்து கொள்ளும் போட்டிகளின் திகதி அறிவிக்கப்படவில்லை.

இப் போட்டிகளை உள்ளூர் ஹொக்கி கரப்பந்தாட்டச் சங்கங்களுடன் இணைந்து வட பகுதி பாதுகாப்புத் தலைமைக் காரியாலயம் ஒழுங்கு செய்துள்ளது.

# “போஷாக்கற்ற குழந்தையின் எதிர்காலம் பாதிக்கும்”

(வேலணை)

தாய்மார்கள் குழந்தைகளைப் பெற்றுவிட்டால் மட்டும் போதாது அதை பேணிப்பாதுகாத்து வளர்க்கவும் தெரிந்திருக்கவேண்டும். ஒரு குழந்தையை நாம் எவ்வளவு தூரம் வளர்த்து ஆளாக்க விரும்புகின்றோமோ அவ்வளவிற்கு குழந்தைகளுக்கு உயிர்சத்துள்ள உணவு வகைகளை நாம் அன்றாட உணவுகளுடன் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்தக் குழந்தைகளின் உடம்பு நல்ல பலமான நோய் நொடியற்ற உடம்புள்ள குழந்தைகளாக வளர்ந்து உங்களையும் (தாய்மார்களை) நாட்டில் உள்ள ஏனையோர்களையும் வாழவைக்கமுன்வரும் குழந்தைகளாக இருப்பார்கள்.

வேலணை 4ம் வட்டாரத்தில் நடைபெற்ற தாய், சேய்நலன் கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய செல்வி பாலாம்பிகை விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் „ஒரு பிள்ளையின் நிறை தாயின் போஷாக்குணவில் தான்தங்கியிருக்கின்றது எமது நாட்டில் பிறக்கும் குழந்தையின் நிறை சராசரி நிறை ஐந்தரை றாத்தலாக இருக்க வேண்டுமென கணக்கிடப்பட்டிருக்கின்றது. நிறை குறைந்த பிள்ளையாயின்அதன் வருங்கால வளர்ச்சி படிப்பு ஆகியவற்றில் அக் குழந்தை குறைபாடாகவே காணப்படும் என்றார்.

# இமையாணன் கொலை: சந்தேகத்தில் இருவர் கைது

(புலோலி)

தீபாவளித் தினத்தன்று இரவு கத்தியால் வெட்டப்பட்டு மரணமான உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த சின்னத்துரை சிங்கராசா (வயது 27) என்பவரின் மரணம் சம்பந்தமாகச் சந்தேகத்தின் பேரில் இருவரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த வைரமுத்து ஜெயசிங்கம், கார்த்திகேசு இரத்தினவேல் ஆகிய இருவருமே இம்மரணம் சம்பந்தமாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைதுசெய்யப்பட்ட இருசந்தேகநபர்களும் பருத்தித்துறை நீதவான் திரு கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது இருசந்தேக நபர்களையும் இம்மாதம் 25ம் திகதிவரை விளக்கமறியலில் வைச்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

யாழ். கச்சேரியில்

## வாரத்தில் இரு தினங்கள்

(நெல்லியடி)

யாழ்.மாவட்டத்தில் கருத்தடை செய்வோருக்கான ஊக்குவிப்புப் பணத்தொகை கச்சேரியிலுள்ள திட்டமிடல்பகுதியில் பிரதி செவ்வாய், வியாழக்கிழமைகளில் வழங்கப்படுகின்றது.கருத்தடையை மேற்கொண்டதற்கான அத்தாட்சிப்பத்திரங்களை சமர்ப்பித்து இங்கு ஊக்குவிப்புத் தொகையைப் பெற முடியும். (அ)

ளையில்

## விவசாயப் பிரதிநிதிகள் தேர்தல்

(பச்சிலைப்பள்ளி)

பளை சமநலச்சேவைப் பிரிவுக்குட்பட்ட பதினெருபயிர்ச் செய்கை உத்தியோகத்தர்பிரிவுகளில் விவசாயப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் மீண்டும நடைபெறவுள்ளன

சில மாதங்களுக்கு முன்பு விவசாயப் பிரதிநிதிகளை இப்பகுதியில் தெரிவதற்கான தேர்தல் நடைபெறும் திகதி அறிக்கப்பட்டிருந்த போதிலும் போதியளவு விவசாயிகள்சமூகமளிக்காததினால் தேர்தல்கள் நடைபெறவில்லை.

## ஐ. தே. க. கிளை அங்குரார்ப்பணம்

(பச்சிலைப்பள்ளி)

யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு பி. விஜயகோன் எழுதுமட்டுவாள், ஆழியவளை, உடுத்துறை, தாளையடி ஆகிய இடங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கிளைகளை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளார், இவருடன் பருத்தித்துறை நகரசபை ஐக்கியதேசியக்கட்சி உறுப்புனர் திரு, வ. சுப்பிரமணியம் சிரேஷ்டம், சி. த. வி. முன்னணி செயலாளர் திரு. எம் எஸ், அலெக்சாண்டர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஈ)

## நல்லின தென்னங்கன்றுகள்

(புலோலி)

அரசாங்கத்தின் பாரிய மரம் நாட்டும் இயக்கத்தின் கீழ் வடமராட்சிப் பகுதியில் நல்லின தென்னங்கன்றுகள் நாட்டப்படவுள்ளன.

நல்லின தென்னங்கன்றுகளைப் பெற்று நாட்ட விரும்புபவர்கள் இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. என். சிவபாதசுந்தரத்துடன் தொடர்புகொள்ளுமாறு வடமராட்சி வடக்கு-கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வேலும்மயிலும் அறிவித்துள்ளார். (அ)

## கார்ட்டர்-ரீகன் சந்திப்பு

வாஷிங்டன், நவ. 20

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிய பின் திரு. றொனல்ட் ரீகன் முதன் முறையாக இன்று கார்ட்டரைச் சந்திக்கிறார்.

ஜனவரி மாதம் 20-ம் திகதி புதிய அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள திரு. ரீகன் சர்வதேச நிலைமைகள் குறித்து இச்சந்திப்பின்போது கார்ட்டருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனக் கூறப்படுகிறது.

திரு. ரீகன் ஏற்கனவே செனட்டர் எட்வேட் கென்னடியைச் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## ஈரானிய சபாநாயகரின் கூற்றுக்கு அமெரிக்கா பதில்

வாஷிங்டன், நவ. 20

அமெரிக்க பணயக்கைதிகள் விவகாரம்தொடர்பாக ஈரான் விதித்துள்ள நிபந்தனைகளை அமெரிக்கா உன்னிப்பாக ஆராய்ந்து வருவதாக அமெரிக்க வெளிநாட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பணயக்கைதிகள் விவகாரம் தொடர்பாக ஈரான் விதித்துள்ள நான்கு நிபந்தனைகளையும் அமெரிக்கா கொள்கையளவில் ஏற்றுக்கொண்டதாக ஈரானிய சபாநாயகர் தெரிவித்த கூற்றுக்கே அமெரிக்கா மேற்கண்டவாறு பதிலளித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவராயன் கட்டில் ஒரு மாதிரிக் கிராமம்

## 40 குடும்பங்கள் தெரிவாகும்

(யாழ்ப்பாணம்)

வசதியற்ற 40 குடும்பங்கள் விவசாயம் செய்து வருமானம் பெறுவதற்காகப் பல்லவராயன் கட்டில் 50 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. காணிக்கச்சேரியில் தெரிவு செய்யப்படும் குடும்பங்களுக்குத்தலா ஒரு ஏக்கர் விதம் காணிவழங்கப்படும். இதற்கான காணிக்கச்சேரி அடுத்தமாதம் நடைபெறவிருக்கிறது.

இலங்கைப்பட்டினி ஒழிப்பு இயக்கத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படவிருக்கும் இந்தத்திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்படும் குடும்பங்களுக்கு மேட்டுநிலப்பயிர்ச் செய்கைக்காக தலா அரை ஏக்கர் நிலமும் வீட்டுத் தோட்டச் செய்கைக்காக தலா அரை ஏக்கர் நிலமும் வழங்கப்படவிருக்கிறது

50 ஏக்கரில் மாதிரிக் கிராமம் ஒன்றை உருவாக்கி அதில் 10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள மாதிரிப்பண்ணை ஒன்றும் அமைக்கப்படும் என்று யாழ் மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி கூறியுள்ளார்.

வருடத்தில் ஒரு போகத்திற்கு மாத்திரம் செய்கை பண்ணப்படும் பயிரான நெற்செய்கையில் மாத்திரம் தங்கியுள்ள பல்லவராயன்கட்டுப் பகுதி விவசாயிகளுக்கு மேட்டு நிலப்பயிர்ச் செய்கையை அறிமுகம் செய்து அதில் பயிற்சி அளிப்பதற்காக இந்தத் துறையில் ஆழ்ந்த அனுபவமுள்ள விவசாயி ஒருவர் மாதிரிப்பண்ணைக்குப் பொறுப்பாக அங்கு குடியமர்த்தப் படுவார் மாதிரிப்பண்ணையில் இருந்து வருமானம் கிடைக்க ஆரம்பிக்கும் வரை இவருக்கு மாதம் 50 ரூபா படி வழங்கப்படும் குடியமர்த்தப்படும் 40 குடும்பங்களும் காடுதிருத்த கிணறு வெட்ட விதைபொருட்களைக் கொள்வனவு செய்ய பட்டினி ஒழிப்பு இயக்கம் அவர்களுக்கு உதவி வழங்கும். குடியேற்றத்திட்டத்தில் கால்நடை வளர்ப்பு உபஉணவுப் பயிர்ச் செய்கை ஆகியனவும் ஊக்குவிக்கப்படும்.

இந்தத்திட்டத்திற்கு நிதி வழங்க முன்வந்தமைக்காக அரசாங்க அதிபர் பட்டினி இயக்கத் தலைவர் திரு ரட்ன துங்காவுக்கு நன்றி தெரிவித்துள்ளார். (சொ-அ)

# காதலில் தோல்வி: இளைஞர் தற்கொலை!

(பட்டுவில்)

காதலில் தோல்வி கண்ட கிளிநொச்சி வாலிபர் ஒருவர், கல்வயலுக்கு வந்து, தன் பழைய எஜமானரின் வீட்டு மலசல கூடத்தினுள் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். இரவோடு இரவாக நடந்த இச்சம்பவம் அதிகாலையில் மலசலகூடத்திற்குச் சென்ற எஜமானரைத் திகைப்புக்குள்ளாக்கியது.

மட்டுவிலையடுத்த கல்வயல் கிராமத்தில் நடைபெறற இச் சம்பவத்தில், கிளிநொச்சியைச் சேர்ந்த முனியாண்டி பொன்னையா என்ற 28 வயது வாலிபரே தற்கொலை செய்து கொண்டவராகும். மரண விசாரணையில் தெரியவந்ததாவது:-

இறந்தவர் சிலமாதங்களுக்கு முன் கல்வயலில் கந்தையா சுப்பிரமணியம். என்பவரின் உழவு இயந்திரச் சாரதியாகக் கடமையாற்றி வந்தார் அவருக்கு கிளிநொச்சியில் ஒரு காதல் விவகாரம் இருந்தது அது கைகூடாமல் போகவே, அவர் மதுப் பழக்கத்தில் இறங்கினர். இது கண்ட உழவு இயந்திர முதலாளி சுப்பிரமணியம், இவரின் சம்பளத்தைக் கொடுத்து, இவரை வேலையால் நீக்கிவிட்டார்.

இறந்தவர் தொடர்ந்து சில மாதங்கள் கிளிநொச்சியில் இருந்தபோது இவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு தோல்வி கண்டார். திடீரென நேற்று மாலை குளத்திற்குக் குளிக்கப் போவதாகக் கூறிப் புறப்பட்ட இவர் கிளிநொச்சியிலிருந்து கல்வயலுக்கு வந்து தற்கொலை செய்து கொண்டார்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் மரண விசாரணை நடத்தினர். இறந்தவரின் தாயார் முனியாண்டி காத்தாய், சகோதரன் மு. சிவராசா ஆகியோர்சாட்சியமளித்தனர் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (இ)

மத்திய கிழக்கில்

# வேலை பெற்றுத்தருவதாக பணமோசடி செய்தாராம்

(யாழ்ப்பாணம்)

மத்தியகிழக்கு நாடுகளில் வேலைபெற்றுத்தருவதாகக்கூறி இளைஞர்களிடமிருந்து பணமோசடி செய்வதாகக் கூறப்படும் ஒருவர் பொலிசாரினல் கைதுசெய்யப்பட்டார். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இவரை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

யாழ். பருத்தித்துறை வீதி அம்மன்கோவிலடியைச் சேர்ந்த செல்லத்துரை சிவராசா என்பவரே இவ்வாறு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளவராவார்.

சந்தேகநபருக்கு எதிராக நாயன்மார்கட்டைச் சேர்ந்த எஸ். கோபாலசிங்கம், யாழ் டைமன் வீதியைச் சேர்ந்த எம். ஆனந்தவடிவேல் ஆகியோர் யாழ் விசேஷ குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பகுதிப் பொலிசில் செய்துள்ள முறைப்பாட்டில். ஈரானில் வேலைகாலி இருப்பதாகவும் பணம் தந்தால் வேலைபெற்றுத் தருவதாகவும்கூறி, தங்களிடமிருந்து தலா பத்தாயிரத்து ஐந்நூறு ரூபா பெற்றுள்ளதாகவும் ஆனல் பல மாதங்களாகியும் வேலைபெற்றுத்தராது ஏமாற்றி வருவதாகவும் தெரிவித்தனர்.

யாழ். பருத்தித்துறை வீதி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சி பிரேமச்சந்திரன் செய்துள்ள முறைப்பாட்டில் சந்தேகநபர் தனக்கு மத்திய கிழக்கில் வேலைபெற்றுத் தருவதாகக் கூறித் தன்னிடமிருந்து ஏழாயிரம் ரூபாவைப் பெற்றுள்ளாரென்றும் கடந்த நான்கு மாதங்களாகியும் இதுவரை வேலைபெற்றுத்தரவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேற்படி மோசடி சம்பந்தமாக யாழ். விசேஷ குற்றத் தடுப்புப் புலனாய்வுப்பகுதிப் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு வே. சி. தர்மலிங்கம் புலன் விசாரணையில் ஈடுபட்டு சந்தேகநபரைக் கைது செய்து முறைப்பாட்டுக்காரரிடமிருந்து இருபத்துஎண்ணாயிரம் ரூபாவை மோசடி செய்ததாக அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (சொ-அ)

# 5 அதிபர்களுக்கு பிரிவுபசாரம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள பிரபல கல்லூரிகளில் அதிபர்களாக கடமையாற்றி அண்மைக்காலத்தில் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற ஐந்து கல்லூரி அதிபர்களுக்கு வடமாகாண கல்லூரி அதிபர்கள் சங்கம் பிரிவு உபசாரவிழாவொன்றை நடாத்தியது.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி வி. அருணாசலம், தேவராளி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. வே. சீனித்தம்பி, தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பி. கனகசபாபதி, யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. எஸ். நடராசா, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. வி சிவசுப்பிரமணியம் ஆகியோருக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் மேற்படி சங்க சார்பில் பிரிவுஉபசார வைபவம் நடாத்தப்பட்டது.

வடமாகாண கல்லூரி அதிபர் சங்கத்தின் தலைவரும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபருமான திரு. கே. அருணாசலம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. (க)

# புதிய பொருளாளர் தெரிவு

(பண்டத்தரிப்பு)

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வடபிரதேச செயற்குழுக் கூட்டம் முகாந்திரம் ஈ. பி. இராசையா தலைமையில் நடைபெற்றபோது புதிய பொருளாளராக பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி கனிஷ்ட பிரிவுத் தலைமை ஆசிரியை திருமதி ருத்திரா கந்தசாமி தெரிவு செய்யப்பட்டார்.

இதுவரை காலமும் பொருளாளராக கடமையாற்றிய யாழ் மாநகரசபை உறுப்பினரான திருமதி அந்தோனியா சுவாமி நாதர் தமது பதவியை ராஜினமாச்செய்ததை அடுத்து இத்தெரிவு நடைபெற்றது.

ஆலய உற்சவங்களில் நடாத்தப்பட்டு வரும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவிச் சிகிச்சை நிலையங்களில் அடுத்த ஆண்டு தொடக்கம் இலவச வைத்திய சிகிச்சை நிலையத்தையும் இணைத்து நடாத்துவதென்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்திய சேவைக்கு பொறுப்பாக யாழ் மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி நியமிக்கப்பட்டுள்ளார். (க)

# தனிச்சிங்களக் கடிதம்

(சித்தன்கேணி)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்ச்சேவை ஒலிபரப்பாளர் பதவிக்கு கடந்தசில மாதங்களுக்குமுன்பு விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. விண்ணப்பித்தவர்களுக்கு தற்போது தனிச்சிங்களத்தில் நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் வந்திருக்கின்றன. விண்ணப்பதாரிகள் சிங்களம் தெரியாததினல் மிகுந்த சிரமப்படுகின்றார்கள். இதுபற்றி வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவர இருக்கின்றனர். (க)

# அத்தனகலைக்கு அநுராவை நியமிக்க சிபார்சு

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் பிரதமமந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டதை தொடர்ந்துகாலியான அத்தனகலை தொகுதிக்கு நுவரெலியா-மஸ்கெலியா தொகுதியின் 2வது எம். பி. திரு. அநுரா பண்டாரநாயக்காவை நியமிக்குமாறு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீ ல. சு. கட்சியின் பிரதித் தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா தலைமையில் கூடிய அரசியல் குழுவே திரு. அநுரா பண்டாரநாயக்காவை தெரிவுசெய்துள்ளது.

அத்தனகலைத் தொகுதிக்கு புதிய உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறித்து சுதந்திரக்கட்சியின் செயலாளர் திரு. ரத்னசிறி விக்கிரமநாயக்கா தேர்தல் ஆணையாளர் திரு பியசேகராவுக்கு அறிவித்துள்ளார்.

நுவரெலியா - மஸ்கெலியா தொகுதிக்கு மற்றுமோர் சுதந்திரக்கட்சி உறுப்பினர் நியமிக்கப்படுவாரெனவும் திரு. விக்கிரமநாயக்கா தெரிவித்தார்.

# 1000 சுருட்டுக்களுக்கு 60 ரூபா கொடுக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

சுருட்டுத் தொழிலாளர்களுடைய சம்பளம் 50 ரூபாவை விட 1000 சுருட்டுக்கு 10 ரூபா கூட்டி அறுபது ரூபா கொடுக்கவேண்டுமென அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இச் சம்பளத்தை இன்று முதல் அமுல்படுத்தவேண்டுமென உற்பத்தியாளர்களை சங்கம் கேட்டிருந்தது.

பல முதலாளிகள் இச்சம்பள உயர்வை மனமுவந்து கொடுப்பதற்கு முன்வந்துள்ளார்கள் என்றும், இச் சம்பள உயர்வு விலைவாசிகள் உயர்வுள்ள இந்தக்காலத்தில்நியாயமானது என எண்ணி மற்றும் முதலாளிகளும் சம்பள உயர்வை ஆதரிப்பார்கள் என்று நம்புவதாகவும் உறுப்பினர் தெரிவித்தனர்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை தீவிரமான முறையில் நடத்துவதற்கு சகல சுருட்டுத் தொழிற்சாலைகளிலுமுள்ள பிரதிநிதிகள் மகாநாடு நடைபெற இருக்கின்றது. இக்கூட்டத்தில் பல தொழிற்சங்கப் பிரமுகர்கள் பங்குபற்றுவார்கள் என அ. இ. ஐ. சு. தொழிற்சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

# மீனுக வந்த எமன்!

(யாழ்ப்பாணம்)

இரவுநேரத்தில் மீன் பிடிக்கச்சென்றவர் மீனைப் பிடித்த சமயம் கையில் முள்ளேறவே மீனை வாயினல் கடித்து விடுவிக்கமுயன்றபோது மீன் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டதால் அவர் மரணமானர்

புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த சி மயில்வாகனத்தின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

புங்குடுதீவு மரணவிசாரணை அதிகாரி திரு. ஆ. நமசிவாயம் மரணவிசாரணை நடத்தினர் விசாரணையின் பின் விபத்துமரணமெனத் தீர்ப்புஅளிக்கப்பட்டது. (சு-அ)

# மேயர் பார்வையிட்டார்

(அரியாலை)

யாழ். மாநகராட்சி மன்றத்தின் முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் உதவி முதல்வர் திரு. சேவியர் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் எஸ். எட்வேட், இ. மரியாம்பிள்ளை, ஜனுப் முகைதீன்பிச்சை, மாநகர பொறியியலாளர், சுகாதாரப் பகுதி அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நாவாந்துறை கோயில் ஒழுங்கைக்கு விஜயம் செய்து அப்பகுதியின் தேவைகள் குறித்து ஆராய்ந்தனர்

அப்பகுதியில் வெள்ளம் நிற்காமல் வீதியை உயர்த்த நடவடிக்கை எடுக்கும்படியும், கூடிய விரைவில் நிரந்தர வடிகால் அமைக்க நடவடிக்கை எடுக்கும்படியும் மாநகர முதல்வர் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார். (அ)

# சங்கம் அமைத்தனர்

(யாழ்ப்பாணம்)

சென்னைப்பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்விகற்ற இலங்கை மாணவிகள் சங்கக் கூட்டம் யாழ்ப்பாணம் இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் இல்லத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு திருமதி கே. சிநெல் தலைமைவகித்தார். இக்கூட்டத்தில் ஜனவரி மாதம் இலங்கைக்கு வரவிருக்கும் சென்னை பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் செல்வி எம். மாசிலாமணிக்கு வரவேற்பளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கல்லூரியின் அபிவிருத்தி குறித்து இலங்கை பழைய மாணவிகள் சங்கம் எவ்வாறு தமது பங்களிப்பை செய்யலாமென திருமதி பி. தியாகராசா விளக்கினர்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்-திருமதி ரி. பிரான்சிஸ். இணைக் காரியதரிசிகள்- திருமதி ரஞ்சி தம்பிராசா, திருமதி சகுந்தலா குணநாயகம், பொருளாளர்- திருமதி சீதா கெங்காதரன்.

நிர்வாகசபை உறுப்பினர்கள்; திருமதி ரி. அரியரத்தினம், திருமதி பி. ஜெயவீரசிங்கம். திருமதி ரி. சிதம்பரநாதன், திருமதி பி. நாகேஸ்வரன், திருமதி வி. றிச்செட்ஸ், திருமதி ரி. மேதர், திருமதி ரி. விஸ்வநாதன்.

# புலோலி கூ. சங்கம் கண்டனம்

(நெல்லியடி)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியகலாநிதி திரு. எஸ். யோகநாதன் இடமாற்றப்படுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை, புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நெறியாளர்குழு வன்மையாகக் கண்டித்து தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

12 வைத்திய அதிகாரிகள் பணிபுரிந்த இவ்வரசினர் வைத்தியசாலையில் தற்போது 4 வைத்தியர்கள் மட்டுமே பணிபுரிவதாகவும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இத்தீர்மானப் பிரதிகள் சுகாதாரஅமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், சுகாதார சேவைப் பணிப்பாளர், மாவட்ட அமைச்சர், அரசாங்கஅதிபர், யாழ் மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வல்லுநர் போட்டியில் பரியோவான் முதலிடம்

(அரியாலை)

யாழ். பரி யோவான் கல்லூரி, யாழ். சென்ற். பற்றிக்ஸ் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் யாழ். பரி. யோவான் 173, சென்ற். பற்றிக்ஸ் 150, ஹாட்லி 105 புள்ளிகளைப் பெற்று முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றன.

16 வயதுப் பிரிவுகளுக்கான போட்டிகளில் ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் எஸ். மனோகரனும், 17 வயதுப் பிரிவுக்கான போட்டிகளில் பரி. யோவான் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் எஸ். இராமச்சந்திரனும், 19 வயதுப் பிரிவுக்கான போட்டிகளில் சென்ற். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் எம். எஸ். அல்பிரட்டும் சாம்பியன் வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (ஈ)

## ஆசிரியர்களுக்கு அதிர்ஷ்டம்

(சித்தன் கேணி)

கல்வித் திணைக்கள ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன கடனுதவிச் சங்கம் 1981ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் தனது அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக ஓய்வூதியப்பணக் கொடைத் திட்டம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டு வருகின்றது. (கு)


**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
**Black Sunday**

**வின்ஸர்** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-30
ரவிச்சந்திரன்-எல். விஜயலக்ஷ்மி-மனோகர் நடித்த
**எதிரிகள் ஜாக்கிரதை**
பயங்கர சண்டைகள் நிறைந்த படம்
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-ஜெய்சித்திரா
அசோகன்
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)
கதை, வசனம்—கருணாநிதி

**SANTHI** Jaffna - 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
★ SIDNEY POITIER
★ MICHAEL CAINE in
**"The Wilby Conspiracy"**
Action - Suspense Thriller - Color
Await! "THE DIRTY DOZEN"


# யாழ். உதைபந்தாட்ட லீக் நடாத்தும் 'பி' பிரிவு உதைபந்தாட்டம்

# 11 கழகங்கள்: இன்று குருநகரில் ஆரம்பம்

(அரியாலை)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் நடைபெறவிருக்கும் "பி" பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று குருநகர் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகிறது.

பதினொரு கழகங்கள் கலந்து கொள்ளும் இச்சுற்றுப்போட்டியில் பாஷையூர் புனித அந்தோனியார் வி. க., குருநகர் பாடும் மீன் வி. க., வைக்கின்ஸ் வி. க., இளைஞர் கார்மல் வி. க., பொற்பதி வி. க., தென்மராட்சி வி. க., ஆகியவை "அ" பிரிவிலும், அரியாலை வி. க., நாவாந்துறை சென்ற். மேரிஸ் வி. க., நவாலி சென்ற் பீற்றர்ஸ் வி. க., அராலி சில்வர்-ஸ்ரார் வி. க., ஆகியவை "ஆ" பிரிவிலும் போட்டியிடவிருக்கின்றன.

இன்று குருநகர் பாடும் மீனை எதிர்த்து வைக்கின்ஸும், நாளை புனித வளனை எதிர்த்து அரியாலையும், புனித அந்தோனியாரை எதிர்த்து கார்மலும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பொற்பதியை எதிர்த்து தென்மராட்சியும், சென்ற் மேரிஸை எதிர்த்து சில்வர்-ஸ்ராரும் மோதவிருக்கின்றன.

இப்போட்டிகளின் முடிவைக் கொண்டே ஏனைய கோஷ்டிகளுக்கான அட்டவணைகள் தயாரிக்கப்படவிருக்கின்றன என்று யாழ் உதைபந்தாட்ட லீக்கின் நிர்வாகச் செயலாளர் திரு. ஜீ. ஜீ. தேவதாசன் தெரிவித்துள்ளார். (ஈ)


2-வது வாரம்
**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
**அந்தமான் காதலி**
(கலர்-புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
**அவள் ஒரு ஜீவநதி**

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Burt Reynold
Sully Field in
SMOKEY AND THE BANDIT
action-comedy-color


## மகஜர் கையளிப்பு

(அரியாலை)

நாவாந்துறை கோயில் ஒழுங்கை கலைவாணி சனசமூக நிலையச் செயலாளர் திரு த. சு. நாகராசா தலைமையில் சென்ற குழுவினர் யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் திரு. இராசா விசுவநாதனைச் சந்தித்து தமது பகுதியில் தாழும் மக்களின் தேவைகள் குறித்தும் வீதி விஸ்தரிப்பது குறித்தும் எடுத்துக் கூறியதுடன் தேவைகளடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இக்குழுவில் நிலையப்பொறுப்பளேர் த்ரு செ, நாகராசா, திருவாளர்கள் சோ. குணசேதரட், நா. தர்மராசா ஆகியோர் இடம்பெற்றனர். (அ)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கோவிலின் புனருத்தாரண பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஞாயிறு மாலை கோவில் முன்மண்டபத்தில் தலைவர் திரு. ச கனகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

## சாயிபாபாவின் 55-வது பிறந்த தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தினர் ஞாயிறு மாலை பகவான் ஸ்ரீசத்யசாயிபாபாவின் 55வது பிறந்ததின விழாவை யாழ். ரசிகரஞ்சன சபா மண்டபத்தில் கொண்டாடுகின்றனர்.

இவ்விழாவில் 'அவதார தத்துவம்' என்னும் பொருள்பற்றி யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியம் உரையாற்றுவார். நடனம், பஜனை, அஷ்டோத்திரம் ஆகியனவும் இடம்பெறும்.

## 80,000 ரூபா வரி நிலுவை

(நெல்லியடி)

புத்தூர் கிராமசபை 78,79ம் ஆண்டு மதிப்பீடு வரியில், இதுவரை அறவிடப்படாத சுமார் 80,000 ரூபா வரி நிலுவையை வரியிறுப்பாளர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. (க)

## பாலவேலை பூர்த்தி

(நெல்லியடி)

அச்சுவேலி கிராமசபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்த கொன்னையன் துரவு பால வேலைகள் சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் பூர்த்தியாகியுள்ளது. (கு)

## பொதுப்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வாண்டே நடைமுறைக்குக் கொண்டு வருமாறு பணிப்புரை எதுவும் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆயினும் 8-ம்தரத்தில் ஆண்டிறுதிப் பரீட்சைக்குக் கொடுக்கப்பட்ட கணித வினாத்தாள் மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது.

கணிதம் I இல் தரப்பட்ட 30 வினாக்களுள் அரைவாசிக்கு மேற்பட்டவை புதிய - இன்னும் நடைமுறைக்கு வராத பாடத்திட்டத்துக்கு அமைவானவை. கணிதம் II இல் தந்த 8 வினாக்களுள் 3 வினாக்கள் புதிய பாடத்திட்டத்துக்கு அமைவானவை,

இடையில், பழைய புதிய பாடத்திட்டங்கள் இரண்டிற்கும் பொதுவான சிலபகுதிகளும் உண்டு. உதாரணம்: சமன்பாடுகள், ஆயினும் பழைய பாடத்திட்டத்தின்படி சமன்பாடுகளின் தீர்வை அணுகும் முறையும் புதிய பாடத்திட்டத்தின்படி அணுகும் முறையும் வேறு வேறானவை. எடுத்துக்காட்டாக X/2 X/3—2 என்ற சமன்பாடு புதிய திட்டப்படி பெரிய விடயமல்ல, ஆனால் பழைய பாடத்திட்டத்தின்படி இது 8-ம் தரத்தில் மிக விவேகமுள்ள மாணவருக்கே கற்பிக்கப்படத்தக்கது.

இன்னும் 8-ம் தரத்தில் பல வாரங்களைச் செலவிட்டுப் பயின்ற பின்வரும் விடயங்களுள் எவ்வித வினாக்களும் தரப்படவில்லை: (1) தொடர்புகளும் அவற்றின் வரைபுகளும் (2) பெயர்வுகளும் காவிகளும் (3) தாயப் பெருக்கல் (4) உருமாற்றங்களில் தாயங்களின் பிரயோகம் (5) ஏகபரிமாணத் தொடர்புகள் (6) சமனில்பாடுகளின் வரைபுகள் (7) விகித சமமான தொடைகள்.

இவற்றுடன் நிகழ்தகவு என்னும் விதத்தில் பகுதி 1-ல் ஒரு சிறுவினா மட்டுமே தரப்பட்டுள்ளது,

படித்த விடயங்களுள் வினாக்கள் தரப்படாமல் படிக்காத விடயங்களுள் வினாக்கள் தரப்பட்ட விடத்து இதனை நோக்கிய மாணவர் அதிலும் ஓரளவு திறமையுள்ள மாணவர் தமக்குத் தேவையானவற்றை ஆசிரியர்கள் கற்பிக்கவில்லை எனவும் தேவையற்றவற்றைக் கற்பித்தார்கள் எனவும் அபிப்பிராயங் கொள்வதும் கூறுவதும் தவிர்க்க முடியாதவை. இதனால் ஆசிரியர் மேல் மாணவர் கொண்டிருந்த நம்பிக்கையும் மதிப்பும் குலைவதையும் தடுக்க முடியாது.

பழைய பாடத்திட்டத்தையே பல பாடசாலைகள் கற்பித்த வேளையில் 1981-ம் ஆண்டுப் புதிய திட்டத்திலிருந்து சில பகுதிகளையும் சில பாடசாலைகள் கற்பித்ததாகவும் பேசப்படுகிறது புதிய பாடத்திட்டத்தை மட்டுமே கற்பித்த பாடசாலைகளும் உண்டோ அறியோம்.

இந்த நிலையில் 8-ம் தரத்திற்கான கணிதப் "பொதுப் பரீட்சை" விடைத்தாள்களுக்குப் புள்ளி வழங்கும் திட்டம் எவ்வாறு திட்டமாக அமையும் என்ற வினா எழுகின்றது. ஒரே மாதிரியான புள்ளி வழங்கும் திட்டம் நீதி வழங்குமா என்பதைக் கல்வித் திணைக்களமும் பாடசாலை அதிபர்களும் கணித ஆசிரியர்களும் கல்விமான்களும் பரிசீலனை செய்ய வேண்டியதவசியம்.


**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜனத்திரள் நிறைந்த 2வது வாரம்
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்
மூன்று மணித்தியாலங்கள் அமெரிக்காவைச் சுற்றி வலம்வருவதற்கு ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
மக்கள் கலைஞர் ★ ஜெய்சங்கர் ★ சிமா ★ புன்னகை அரசி கே. ஆர். விஜயா
நாட்டியப் பேரொளி பத்மினி ★ வி. கே. ராமசாமி ★ மனோரமா
விதுபாலா ★ ரீனா ★ அமெரிக்க நடிகர்கள் ஜோ ஆலபரட் ★ மார்ஷல் மற்றும் பலர் ஜொலிக்கும்
**ஒரே வானம் ஒரே பூமி**
(வண்ணக்கலர்)
இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட வண்ணத் திரையோவியம்.
ஆங்கிலப் படங்களை மிஞ்சும்வகையில் அமைந்த விறுவிறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.
சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமேல் எந்தப் படத்திலும் காணக்கிடைக்காத பயங்கரச் சண்டைகள், மோட்டார் சைக்கிள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.


## போயா தினத்தையொட்டி இன்று சினிமா காட்சிகளில்லை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

பிரார்த்தனை நூல்கள்
பிள்ளையார் கதை 2-00
பிள்ளையார் புராணம் உரையுடன் 2-50
விநாயகர்தோத்திரமாலை 2-50
விநாயகர் அகவலும், கவசமும் -50
மார்கழிப் பாராயணம் 2-00
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## நெடுங்கேணி கொள்ளை:
# தேடப்பட்ட ஐவரும் கைது! கொள்ளை பொருட்கள் மீட்பு!!

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் நிலையத்திலிருந்து வருவதாகக்கூறி நெடுங்கேணி ஒருதோட்டையிலுள்ள வீடு ஒன்றிற்குள் நள்ளிரவில் புகுந்து 33 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும், துப்பாக்கி ஒன்றையும் கொள்ளையடித்துச் சென்றது சம்பந்தமாகப் பொலிசாரால் தேடப்பட்டு வந்த ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கொள்ளை சம்பந்தமாகப் புலன்விசாரணையில் ஈடுபட்ட முல்லைத்தீவுப் பொலிசார் ஏற்கனவே இருவரைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியதையடுத்தே ஐவரும் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு வவனியா பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட ஐவரில் இருவர் யாழ். சிறைச்சாலையிலிருந்து அண்மையில் தப்பியோடிய கைதிகள் என விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டதாகக்கூறப்படும் பொருட்களில் ஒரு பகுதியையும் பொலிசார் மீட்டனர். (கொ-இ)

# இன்றைய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலைஇலக்கிய நண்பர்கள் ஒன்றியத்தின் பத்திரிகை எழுத்தாளர், கருத்தரங்கு இன்று பகல், யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை மண்டபத்தில் நடைபெறுகின்றது. இக் கருத்தரங்கில் பலர் உரையாற்றவுள்ளனர்,

# விக்கிரக பவனி இன்று

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலை சித்திவிநாயகர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படும் விக்கிரகம் இன்றுவெள்ளிக்கிழமை காலை 7-30 மணிக்கு யாழ். தட்டாதெருச் சந்தி விநாயகர் ஆலயத்திலிருந்து ஆசிரிய கலாசாலைக்கு பவனியாக எடுத்துச் செல்லப்படும்.

# தாயும் 2 பிள்ளைகளும் குளத்திற்குப் பலி!
## புத்துவெட்டுவானில் சோகம்

(துணுக்காய்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் இரு பிள்ளைகளும் நீரில் மூழ்கி பரிதாபகரமாக மரணமான சம்பவம் முறிகண்டியை அடுத்துள்ள புத்துவெட்டுவான் கிராமத்தில் நடைபெற்றுள்ளது. தாயான (45 வயது) பெண்ணும் மகள் (20 வயது) சிறிய மகள் (8 வயது) ஆகிய மூவரும் குளத்துக்கு நீராடச் சென்றதாகவும் சிறுமி நீரில் தத்தளித்ததைக்கண்ட மற்ற மகளும் தாயும் காப்பாற்றச் சென்றபொழுது மூவரும் நீருக்கடியிலுள்ள குன்று ஒன்றில் மூழ்கி தத்தளித்து மரணமானார்கள் என்றும் தெரிகிறது.

மறுநாள் குளக்கரைக்கு சென்ற ஊரவர்கள் இந்த மூவரின் உடலும் குளத்தில் மிதக்கக் கண்டு கிளிநொச்சிப் பொலிசாருக்கு தகவல் கொடுத்தனர் மரணவிசாரணை அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (ஈ)

# கன்பொல்லையில் டி ஐ ஜி

(நெல்லியடி)

ஜனவரி மாதத்தில் திறந்து வைக்கப்படவுள்ள கன்பொல்லை மாதிரிக் கிராமத்திற்கு பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. ஏனெட் பெரரோ விஜயம் செய்திருந்தார்.

## மகரகம கூட்டிச்செல்லப்பட்ட
# புற்று நோயாளி யாழ். ரயிலில் மரணம்

(புளியங்குளம்)

யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்ட புற்றுநோயாளி ஒருவர் ரயிலில் மரணமானார்.

இந்த நோயாளி கிளிநொச்சியில், ரயில் சென்றுகொண்டிருந்தபோது ரயில் உண்டிச்சாலையில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தசமயம் உயிர் பிரிந்ததாகக் கூறப்படுகிறது.

சிற்றுண்டிப்பெட்டி மாங்குளம் புகையிரத நிலையத்தில் கழற்றி விடப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் புதன் காலை கொழும்பு சென்றதபால் ரயிலிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. (இ)

## முல்லைத்தீவுக் கொள்ளை வழக்கு:
# விசாரணை இடைநடுவில் இரு எதிரிகளும் விடுதலை!

(வவனியா)

முல்லைத்தீவுக் கொள்ளை வழக்கில் எதிரிகள் இருவரும் விசாரணை இடைநடுவில விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு வவனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் முல்லைத்தீவில் 76 செப்டம்பர் 4-ம் தேதி ஆறுமுகம் கதிரவேலுவுக்குச் சொந்தமான இரும்புப் பணப் பெட்டியைத் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்ததாக மோகன் தர்மராசா, நிகால் விக்கிரமசிங்கா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரியான மோகன் தர்மராசா பிரான்ஸ் நாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்துவருவதால் அவரின்றியே வவனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.

இருநாள் விசாரணை நடைபெற்ற பின் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜி ஜி. பொன்னம்பலம் ஜூனியர் இதுவரை அளிக்கப்பட்ட சாட்சியங்கள் திருப்திகரமில்லாததினால் விசாரணையை முடிவுக்கு கொண்டுவருமாறு விண்ணப்பம் செய்தார். இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்

அரச தரப்பில் அரசசட்டத்தரணி ஏ. கதிரேசன் ஆஜரானர். (க-அ)

# ஆசிரியர் இல்லாததால் பாடசாலை மூடப்பட்டுள்ளது
## பரு. எம். பி. நடவடிக்கை

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியிலுள்ள செம்பியன் பற்று றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் கடமையாற்றிய ஒரே ஒரு ஆசிரியை சுகயீனம் காரணமாக லீவில் நிற்பதினால் பாடசாலை மூடப்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் பருத்தித்துறைத் தொகுதி எம். பி. திரு. க. துரைரத்தினத்திடம் புகார் செய்துள்ளார்கள்.

பருத்தித்சிறை எம். பி. இதுசம்பந்தமாக வடமாநிலக் கல்விப்பணிப்பாளருக்குத்தந்தி அடித்துள்ளார். (ஈ)

# அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்ட இப்படங்களில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு, திரு ஆர். பிரேமதாச, திரு. வி. தர்மலிங்கம் உட்படப் பலர் காணப்பட்டனர். அன்று ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிரான கூட்டங்களில் கலந்துகொண்ட அதே தர்மலிங்கம் தான் அண்மையில் தெமட்டக்கொடையில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கலந்துகொண்ட கூட்டத்திலும் உரையாற்றினார். (ம—அ)

# யாழ். மாநகரசபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது. ஆனால் திரு. ஆறுமுகம் வராததினால் இப்பிரேரணை கைவிடப்பட்டது.

மீண்டும் இப்பிரேரணையை கூட்டணியைச் சேர்ந்த திரு. அலோசியஸ் கொண்டுவரவிருந்தார். நேற்று இப்பிரேரணையை வாபஸ் பெறுவதாகவும் 5 கட்சிகள் யாழ்ப்பாணத்தில் கூட்டம் வைப்பதால் இப்பிரேரணை அவசியமில்லை என்றும் கூறினர்.

ஏற்கனவே இருதடவை கொண்டுவந்து கைவிடப்பட்ட பிரேரணையை மீண்டும் கொண்டுவந்துவிட்டு ஏன் வாபஸ்பெறவேண்டும்? என்று திரு. தம்பு கந்தையா கேட்டார். அருகிலிருந்த திரு. என். ரி. செல்லத்துரை அவரின் அருகில் சென்று இரகசியமாக ஏதோ கூறியதும், திரு. தம்பு கந்தையா இருந்துவிட்டார்.

வாபஸ்பெற்றுக்கொள்ளப்பட்டது. (க-இ)

# விற்பனைக்கு

3 ஸ்ரீ தொடக்கம் 11 ஸ்ரீ வரையுள்ள மொறிஸ் ஒக்ஸ்போட், மொறிஸ் மைனர் வோக்ஸ்வகன் கார்கள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு வாகனம் மாற்றவும், பினான்ஸ் வசதிகளும் செய்து கொடுக்கப்படும். பார்வையிடும் நாட்கள் சனி, ஞாயிறு. விபரங்களுக்கு: 81/2, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோவிலடி) யாழ்ப்பாணம். (7406)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இன்றைய தமிழர் அரசியல் நிலை குறித்து நடைபெறும் கருத்தரங்கொன்று எதிர்வரும் 24-ம் திகதி திங்கட்கிழமை மாலை உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள கல்லுவம் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இங்கருத்தரங்கில் திரு ஈழவேந்தன், திரு. கோவை மகேசன் ஆகியோர் உரையாற்றுவார்கள். (கொ அ)

# இறை நம்பிக்கையினால் ஏற்படும் வெற்றிகள்

(யாழ்ப்பாணம்)

இறை நம்பிக்கையால் மக்கள் தமது வாழ்க்கையைப் புனிதப்படுத்திக்கொள்கிறார்கள். மனச்சாந்தி ஏற்பட்டு வாழ்க்கையில் வெற்றிவாகை சூடி பேரானந்தம் அடைய சற்குணர் சகவாசம் கடவுள் நம்பிக்கை யோகசாதனைகள் என்பன பெரிதும் உதவும். இறைவன் ஒருவனுவான். அவனை அடையும் வழிகள் வெவ்வேறாக உள்ளன. அவை மார்க்கங்கள் என்று சொல்லப்படுகின்றன. மார்க்கங்கள் மதம் சமயம் என அழைக்கப்படுகின்றன சன்மார்க்கம் என்பது எல்லாச் சமயத்திற்கும் பொதுவான பாதை அதையே எமது சமயம் வலியுறுத்திச் சொல்லுகின்றது. சமய குரவர்கள் காட்டிச் சென்ற பாதை சன்மார்க்க பாதை என்பது கூர்ந்து கவனிக்கவேண்டியது.

இவ்வாறு மலேஷிய திவ்ய ஜீவன சங்கத் தலைவர் சுவாமி பிரணவானந்தஜீ கூறினார்.

அளவெட்டியில் தம்மைச் சந்திக்க வந்த அன்பர்களிடம் இக்கருத்தை அவர் வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: இந்துமதத்தின் பரந்தநோக்கத்தையும் தத்துவப்பொருளையும் உணர்ந்த மேலைநாட்டினர் அதற்கு முக்கியத்துவம் அளித்துவருகின்றனர்; அமெரிக்காவிலும் ஏனைய நாடுகளிலும் இந்து சமயதத்துவங்கள் பெரிதும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன,

அண்மையில் இமாலய அடிவாரத்தில் திவ்வியஜீவன சங்கத்தின் குருதேவர் சிவானந்தரின் ஜெயந்தி விழாவில் கலந்துகொண்டுவிட்டு மலேஷியாவிற்கு திரும்பும் வழியில் இலங்கை வந்த சுவாமிகள் தற்பொழுது அளவெட்டியில் தங்கியுள்ளார். இன்னும் சில தினங்களில் பலேஷியாவிற்குப் போக உத்தேசித்துள்ளார்.

# விசேடபடியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதாந்த விசேட படியாக முதல்வருக்கு 2000 ரூபாவும், உதவி முதல்வருக்கு 1000 ரூபாவும், உறுப்பினர்களுக்கு 500 ரூபாவும் இதுவரை அரசு வழங்கி வந்தது இப்படியை இனிமேல் சபை நிதியிலிருந்து வழங்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

யாழ். மாநகரசபை முதல்வர், உதவி முதல்வர், உறுப்பினர்களுக்கு விசேட படியாக ஒரு லட்சத்து 62 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. (க-இ)

# சிறிமா...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கிளிநொச்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அங்குவைத்து வரவேற்பளிக்கவுள்ளனர். அங்கிருந்து கார் மூலம் வவனியாவுக்குப் புறப்படுவார். அங்கு நடைபெறும் வரவேற்பில் கலந்துகொண்ட பின் அவர் கொழும்பு திரும்புவார். (சொ)

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை லிமிட்டெட்)
* உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
* அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
* சுற்றுலாக்கள் * பாஸ்போட்
உங்களது பிரயாண வசதிகளை
நீங்கள் கொழும்பு செல்லாமலே
நாங்கள் ஒழுங்கு செய்கின்றோம்!
யாழ்ப்பாணம் — கொழும்பு
விமானப் பயணத்துக்கும் எம்மை நாடுங்கள்
MACKINNON TRAVEL SERVICE (CEYLON) LTD.
யாழ். கிளை
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்.
8, பருத்தித்துறை வீதி — யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92, தொலைபேசி; 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. QD 8948/78 The Eelanaadu No 45. Grams Eelanaadu. Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org